# களத்தில்




நீண்டகாலமாக வீரம்செறிந்த ஒரு விடுதலைப் போராட்டத்தை நடாத்திவரும் தமிழினம் சமர்களில் பின்னடைவுகளைக்கண்டு சளைத்துப் போவதில்லை. சாவும், அழிவும், இடப்பெயர்வும், அகதிவாழ்வுமாக பெரும் துன்பப் பளுக்களைச் சுமந்து நின்றபோதும் எமது மக்கள் உறுதி தளரவில்லை. நாம் விடுதலையில் பற்றுக்கொண்டு, ஒன்றுபட்டு உறுதிகொண்டு நிற்கிறோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிட நாம் திடசங்கற்பம் பூண்டுநிற்கிறோம். இன்று, இரத்தம் வழிந்தோடும் எமது மண், நாளை, ஒரு சுதந்திர பூமியாக மாறும் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


(15.07.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (190) அன்பளிப்பு : 60 p


# நினைவழியா நாட்களும்




# நெஞ்சில் மூண்ட நெருப்பும்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# இனஅழிப்பின் 16வது ஆண்டு

இலங்கைத்தீவில் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தின் தமிழ் இனஅழிப்பு செயற்திட்டத்தின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக ஆடி 1983 தமிழின அழிப்பு அமைந்தது. உலகில் முதன் முறையாக ஒரு அரசாங்கமே திட்டமிட்டு தனது பிரஜைகள் மீது காடையர்களை இன அழிப்புச் செய்யும்படி ஏவி விட்டுவிட்டு அக்காடையர்களுக்கு தனது படைகளைக் கொண்டு பாதுகாப்பும் கொடுத்த ஒரு வரலாறு ஆடி 83 இன் வரலாறு. இந்த வரலாற்று அனுபவங்கள் தமிழ் மக்களை சிறீலங்கா அரசாங்கம் தனது பிரஜைகளாக நடத்துவதில்லை என்ற உண்மையை உலகிற்குத் தெட்டத் தெளிவாக்கியது.

1983 இனஅழிப்பு யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவு அல்ல. திடீர் உணர்ச்சிகளால் தோன்றிய கலவரமும் அல்ல. காலனித்துவ அரசாங்கம் இலங்கைத்தீவில் இருந்து விலகியது முதல் தமிழர்களிடை இனங்காணக்கூடிய அச்சத்தை தோற்றுவித்து அவர்களின் அரசியல் பணிவை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்திற்கு செலுத்த வைப்பதற்கும் தமிழர் தாயகத்தின் உட்கட்டுமானங்களைச் சீர்குலைத்து தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமிப்பதற்குமான அரசியல் செயற்திட்டங்களின் நீட்சியாகவே இந்த 1983 இனஅழிப்பு நடாத்தப்பட்டது. முதலில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவ விகிதாசாரம், குடியுரிமைப் பறிப்புக்கள், சிங்கள வாக்காளர்களை பெரும்பான்மையினராக்கும் தேர்தல் தொகுதி நிர்ணயங்கள் மூலம் மாற்றப்பட்டு தமிழர்கள் தம்மை சட்டவாக்கத்தின் மூலம் பாதுகாக்கும் உரிமை அழிக்கப்பட்டது. இதனை அடுத்து தமிழர்களது தாயகப்பகுதிகளில் அரச ஆதரவுடனான சிங்களக் குடியேற்றங்கள் நெறிப்படுத்தப்பட்டு தமிழ் சிங்கள அரசுகளை இயல்பாகவே பிரித்த காடுகள் அழிக்கப்பட்டன. இதனால் தமிழர் தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்பு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டது. அதனை அடுத்து

தமிழர்களின் நிர்வாகப் பங்கேற்புக்களை சிதைக்கும் வகையில் சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கும் முயற்சிகள் ஆரம்பமாகி அதற்குத் தமிழர்கள் ஜனநாயக வழியில் காலிமுகத்திடலில் நடத்திய சத்தியாக்கிரகத்தை காடையர்கள் கொண்டு தாக்கிழித்து முதல் தடவையாக அரசியல் வன்முறையை சிங்கள அரசாங்கம் ஆரம்பித்தது. தமிழ் மக்களுடைய ஜனநாயக எதிர்ப்புக்களை பொருட்படுத்தாமல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு அதன் தொடர்நிலையில் 1958 இனக்கலவரத்தின் மூலம் தமிழர்களின் அரசியல் பணிவை இனஅழிப்பு அச்சுறுத்தலை தோற்றுவித்துப் பெறும் பழக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1977, 1981ஆம் ஆண்டுகளில் தமிழர்கள்மேல் தொடர்ந்த இனஅழிப்புக்களுக்கு சிங்கள அரசுகள் அளித்த உற்சாகமே 1983இல் தமிழர்களை தாக்கியழித்து அவர்களின் வீடுகளைச் சூறையாடி தமிழ்ப் பெண்கள், குழந்தைகளை பாலியல் வன்முறைகள், படுகொலைகள் செய்யும் ஒரு இனவெறிக் கும்பலை சிங்களவர்களிடை தோற்றுவித்தது. இவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பும் படைபல பாதுகாப்பும் அளித்து தமிழர்கள் மீதான தனது இனஅழிப்புத் திட்டங்களுக்கு அவர்களை கருவிகளாகப் பயன்படுத்தும் கேவலமான அரசியல் சிங்கள அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது. இதுவே ஆடி 83 இனஅழிப்பு.

உண்மையில் சிறீலங்கா அரசாங்கம் கூறுவது போல் யுத்தத்தின் விளைவாக இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் சிறீலங்காப் படைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகவில்லை. சிறீலங்கா படைகொண்டு அப்பாவித் தமிழ் மக்களை இனஅழிப்பு, இனஅச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கியதன் விளைவாகவே தமிழர்கள் தங்களைப் பாதுகாக்க தாங்களே ஆயுத எதிர்ப்பை மேற்கொள்ளவேண்டி நேர்ந்தது. 1983 இனஅழிப்பின் போது துன்பப்பட்டு துடித்துக் கொண்டிருந்த தமிழர்களுக்கு சிறீலங்கா கொடுத்த ஆறுதல் மொழி ஒன்று 'போர் என்றால் போர்' என்ற தமிழ் மக்கள் மேலான யுத்தப்பிரகடனம். அடுத்தது தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை மட்டுமல்ல தமிழர்களின் பேச்சுச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் சிறீலங்கா பௌத்த சிங்களக் குடியரசின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக கருத்து தெரிவித்தலைக்கூட அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மூலம் தடுத்தமை.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் சிறீலங்கா தமிழ் மக்கள் மீது யுத்தம் ஒன்றைத் திணிப்பதற்கு உருவாக்கிய அரசியல்ச் சட்டங்கள். இவைகளை தமிழ் மக்கள் எதிர்ப்பதைத் தடுக்கும் வகையில் அவர்களிடை இனங்காணக்கூடிய அச்சத்தைத் தோற்றுவிப்பதற்கு நடாத்தப்பட்ட தமிழ் இனஅழிப்பே 1983 ஆடி இனஅழிப்பு. இந்த நேரத்தில் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கமானது தமிழ் மக்களின் மேலான யுத்தத்தை திணித்தமைக்கான முக்கிய காரணங்களை எடுத்து நோக்குவது அவசியம். ஒன்று முன்னர் கூறியதுபோல தமிழ் மக்களின் அரசியல் பணிவை வலுக்கட்டாயமான முறையில் சிங்கள அரசாங்கத்திற்கு பெறுவது. அடுத்தது தமிழர்களின் தாயகத்தின் உட்கட்டுமானங்களை சிதைத்து தமிழர்கள் தங்களுடைய தாயகத்தை மீளமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை இல்லாதழித்தொழிப்பது.

இந்த இரண்டு நோக்கங்களும் சிங்கள அரசாங்கங்கள் எல்லாவற்றுடையவும் அரசியல் இலக்காக உள்ளன. இவற்றை காலனித்துவம் தமக்கு அளித்த பாராளுமன்றப் பெரும்பான்மையினைக் கொண்டு சட்டவாக்கங்கள் நீதித்துறை மாற்றங்கள் நிர்வாக மேலாண்மைகள் மூலம் சிங்கள அரசாங்கங்கள் எய்த முயன்றதன் விளைவாகத் தமிழர்கள் காலனித்துவம் தாங்கள் ஒற்றையாட்சியில் பங்குபற்றுவதற்கு விதித்த நிபந்தனைகளை சிங்கள அரசாங்கம் மீறிவிட்டமையை உலகிற்குத் தெளிவுபடுத்தி தமது சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தின் மூலம் அதிலிருந்து விலகி தமது தமிழீழத் தாயகத்தை மீளஅமைப்பதற்கான தேச உருவாக்கத்தில் ஈடுபட்டனர். இதனை தடுப்பதற்காக அரசியல் விழிப்புணர்வுற்ற தமிழீழ மக்களை இனஅழிப்புச் செய்யவும், அவர்களது தமிழீழத் தேசத்தை கட்டுமான அழிவுக்கு உட்படுத்தவும் சிங்கள அரசாங்கம் வகுத்த அரசியல் செயற்திட்டமே தமிழ் மக்கள் மீதான யுத்தம்.

தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களை அழித்தலே சிறீலங்காவின் யுத்த நோக்கம் என்பதற்கான ஆதாரத்தை சிறீலங்காவின் இனமுரண்பாட்டின் பொருளாதாரப் பரிமாணங்கள் என்ற தலைப்பில் ஆடி 1983 குறித்து ஜோன் எம். ரிச்சர்ட்சனும் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.ஏ. சமரசிங்கவும் நடாத்திய ஆய்வின் சில தரவுகள் கொண்டுள்ளன. இவ்வாய்வின்படி 122 தொழிற்சாலைகளும் 2300 வர்த்தக நிறுவனங்களும் 20000க்கு மேற்பட்ட வீடுகளும் 1983 ஆடியில் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றினுடைய மொத்த பெறுமதி 953 மில்லியன் ரூபாக்கள். இதனை அடுத்த காலகட்டத்தில் அதாவது 1983 முதல் ஆடி 1987 வரை 69400 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதுடன் 30000 வீடுகள் சேதப்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கும் இவ்வாய்வு இக்காலகட்டத்தில் 11300 வர்த்தக நிறுவனங்கள் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டன எனவும் இவற்றுள் 8000 நிறுவனங்கள் முற்றாக அழிக்கப்பட்டன எனவும் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது. இவற்றுடைய மொத்தப் பெறுமதி 23500 மில்லியன் ரூபாக்கள். இவ்வாய்வு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களின் முழுவடிவினையும் வெளிக்கொண்டு வந்துள்ளதா என்ற கேள்வியை ஒருபுறம் வைத்து விட்டு இவ்வாய்வு தரும் தகவல்கள் தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களை உருக்குலைப்பதனையே சிங்கள அரசாங்கங்கள் இலக்காகக் கொண்டு செயற்படுகின்றன என்ற உண்மையை இவ்வாய்வு தரும் இத்தகவல்கள் தெளிவாக்கியுள்ளன என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். சிறீலங்கா அரசாங்கம் யுத்தத்தைப் பரவலாக நடாத்துவதன் மூலம் திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களை அழித்துவருவது சர்வதேச குற்றச்செயல். இந்த சர்வதேசக் குற்றச்செயல் தெளிவான நிலையில் சிறீலங்காவின் தேசிய இனமுரண்பாட்டினை ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையாகப் பார்க்கமுடியாது.



1983 ஆடிக் கொடுமைகள் கண்டு சிறீலங்காவை கண்டித்த நாடுகள் இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மான வாக்களிப்பில் கலந்து கொள்வதில் காட்டிய அசிரத்தையே அக்கண்டனத் தீர்மானம் சில வாக்கு வித்தியாசத்தில் நிறைவேறாமல் போனமைக்கு காரணமாயின. இதனால் சிங்களப்படைகள் தமிழர் பகுதிகளில் மேலும் மேலும் இனஅழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் சாத்தியக் கூறுகள் வலுப் பெறுகின்றது என ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்புக்குரிய மனித உரிமைச் செயற்பாட்டாளரான லியோ கூப்பர் தனது இனஅழிப்பு என்னும் நூலில் எதிர்வு கூறியிருந்தார். அதனைத் தான் இன்று தமிழ் மக்கள் அனுபவிக்கின்றனர். ஆகவே தமிழ் மக்களின் இன்றைய அவலநிலைக்கு 1983இல் தாங்கள் காட்டிய அசிரத்தையே காரணம் என்பதை உலக நாடுகள் எண்ணிப்பார்க்க வேண்டிய நேரமிது.

1995 ஆடி 9இல் இராணுவ நடவடிக்கைக்கு பாதுகாப்புத்தேடி ஆலயத்திற்குச் செல்லும்படி அறிவித்த சிறீலங்கா பின்னர் தமிழ் பொதுமக்கள் தஞ்சமடைந்த நாவாலி சென். பீட்டர்ஸ் தேவாலயத்தின்மேல் குண்டு வீசி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த பொழுதும் உலக அரங்கில் சில கண்டனக்குரல்கள் எழுந்தன. ஆனால் அவை எதையுமே பொருட்படுத்தாமல் மன்னிப்புக் கூடக் கேட்க மறுத்த சிறீலங்கா ஜனாதிபதியின் ஆட்சிக்கு உலக நாடுகள் தொடர்ந்தும் ஆதரவும் உதவிகளும் வழங்கி வருகின்றன. அவ்வாறே நாகர்கோவில் பள்ளிச் சிறுவர்கள்மேல் குண்டு வீசப்பட்ட கொடுமைக்கோ அல்லது பள்ளிச் சிறுமிகள், தமிழ் பெண்கள் தெட்டத் தெளிவாக பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு இனஅழிப்புக்களுக்கு உள்ளாகிய பல சம்பவங்களுக்கோ அல்லது தமிழ் மக்கள் பாரிய இடப்பெயர்வுக்கு உள்ளாகிய பொழுதோ அல்லது இவ்வாறு பாரிய இடப்பெயர்வுகளுக்கு உள்ளான மக்களின்மேல் உணவினை சிறீலங்கா ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கோ அல்லது இவை போன்ற எத்தனையோ மனித வதைகள் காணாமல் போதல்கள் இனஅழிப்புக்கள் சிறீலங்காவால் தொடர்ந்தும் தொடர்ந்தும் நடாத்தப்படுவது குறித்து உலக நாடுகள், உலக அமைப்புக்கள் [illegible] இருப்பதுடன் மேலும் மேலும் சிறீலங்காவுக்கு உதவியும் வருகின்றன.

இந்தக் கொடுமையை உலகின் மனச்சாட்சியுள்ள அனைவருக்கும் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்து எம் மக்களுக்கு நீதி கிடைக்கும்வரை அவர்களின் குரலொலியாக உழைக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழர்களாகிய எம்முடைய கடமை. அவ்வாறே அன்று முதல் இன்று வரை சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் எம் உடன் பிறப்புக்களது துயர் துடைக்க துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு இயலுமான கூடுதல் நிதி உதவிகளை அளிப்பதும் நம் பொறுப்பாக உள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P O Box 47,<br>7400 Herning. | **FRANCE**<br>TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris | **GERMANY**<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | **ITALY**<br>TCC<br>Via Vincenzo Di Pavia No14,<br>90138 Palermo |
| **NETHERLANDS**<br>TCC<br>Grt. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | **NORWAY**<br>TCC<br>P O BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Josef Str - 110,<br>8005 Zurich. | **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432 |

# போர் எந்தக்கட்டத்தில் உள்ளது!

வன்னிப் பெருநிலப்பரப்பில் சிங்களப்படை, அகலக்கால் பரப்பி நிலம் விழுங்கிவரும் இந்தக் கட்டத்தில் தமிழீழ மக்கள் அனைவரும் விளக்கம்பெற விரும்பும் வினா இது. போர் எந்தக் கட்டத்தில் உள்ளது?

போரில் அரசபடைகள் வெற்றிவாகை சூடிவருவதாக, சந்திரிகா அரசாங்கம் மார்தட்டி வருகின்றது. சிங்களப்படைகள் கைப்பற்றியுள்ள தமிழர் நிலங்களை இராணுவ அளவு கோலாகப் பயன்படுத்த விரும்பும் அனைவரும் சந்திரிகா அரசாங்கத்தின் வெற்றிக் கோசத்தை ஆமோதித்து தலையாட்டுகின்றனர்.

எனினும், மரபுசாராத வகையில் சிந்திக்கும் வரலாற்றுப்பிரக்ஞையுடைய ஆய்வாளர்கள் வேறு விதமாக எதிர்வுகூறுகின்றனர். போரில் திருப்புமுனைகள் நிகழப்போகும் இராணுவப் பிரளயத்திற்குள் போராட்ட வண்டி நுழைந்துள்ளது என்று அவர்கள் பிரகடனம் செய்கின்றனர்.

அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் புலிகள் தமது பலத்தை பலமடங்காகப் பெருக்கிக்கொள்ளும் வரலாற்று வாய்ப்பை சந்திரிகா அரசாங்கம் புலிகளுக்கு வழங்குகின்றது என அவர்கள் ஆருடம் கூறுகின்றனர்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த - முக்கியத்துவம் அற்ற என்ற பேதமில்லாமல் புலிகளின் வசமிருந்த எல்லாவகை நிலத்தையும் ஆக்கிரமிக்கும் ஒரு போராட்டத்தை படையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் புலிகளை ஒரு பகுதிக்குள் அடைத்து அவர்களை நசுக்கி -



புலிகள் இயக்கத்தின் வீரியமும் போரிடும் ஆற்றலும் உலகப்புகழ் பெற்றவை

எல்லாளன்

அழிக்கும் **புல்டோசர் போர்த்திட்டத்தை** சிங்களப் படைகள் கடைப்பிடிக்கின்றன.

புலிகள் வசமுள்ள நிலத்தினது விஸ்தீரணத்தைக் குறைக்கக் குறைக்க, புலிகளின் இராணுவபலமும் குறைந்து கொண்டுபோகும் என்ற பொதுமகனின் எதிர்பார்ப்புடன் படைத்தலைமை இந்த புல்டோசர் திட்டத்தை அமுல்ப்படுத்துகின்றது.

ஆனால், படைத்தரப்பின் இந்த இராணுவ சித்தாந்தத்திற்கு முரணாக அனைத்துத் தரப்பினரும் வியக்கும் வகையில் புலிகளின் இராணுவ பலமும் போரிடும் திறனும் வளர்ந்து வருகின்றது.

ஆனாலும் பேரினவாதக் கலங்களால் ஆக்கப்பட்டுள்ள சந்திரிகா அரசாங்கத்தின் மூளை மேற்குறித்த புறநிலை உண்மைகளை கிரகிக்க மறுக்கின்றது.

ஒரு விடுதலைப்போராட்டத்திற்கு வீரியம் சேர்க்கும் அரசியல்-இராணுவ மற்றும் உளவியல் காரணிகளை பெரும்பாலான மரபுசார் இராணுவ ஆய்வாளர்கள் கருத்தில் எடுப்பதில்லை. இத்தகையவர்கள் கூறும் இராணுவ எதிர்வுகூறல்கள் தோல்விகண்டு வருவதற்கு பல உதாரணங்கள் உண்டு.

ஆட்தொகை - ஆயுதபல தராசுகளில்வைத்து அளந்து முடிவு கூற முடியாத புதிரான அம்சங்களை விடுதலைப்போராட்டங்கள் கொண்டிருக்கின்றன.

யூதமக்கள் இஸ்ரேல் என்ற நாட்டை 1948 இல் பிரகடனப்படுத்தியபோது சுற்றியிருந்த அரபு நாடுகள் அந்தப் புதிய தேசம்மீது போர்ப்பிரகடனம் செய்து அதை ஆக்கிரமிக்க நாலா புறத்திலிருந்தும் தமது படைகளை நகர்த்தின.

அந்த வேளையில், இரண்டாம் உலகப்போர் நாயகர்களில் மிக முக்கியவரான இங்கிலாந்தின் படைத்தளபதி மொன்ற்கோமரி, அரபுப் படைகளின் ஆட்பலம் மற்றும் ஆயுத வளங்களை யூத விடுதலைப் போராளிகளுடன் ஒப்பிட்டுவிட்டு அரபுக்கள் வெல்வது உறுதி என்று எதிர்வு கூறியிருந்தார். ஆனால், பென்கூரியன் தலைமையிலான யூத விடுதலைப்படை நடாத்திய வீரம் செறிந்த மக்கள் போராட்டத்தின் மூலம் வெற்றியைப்பெற்று - வரலாற்றுச் சாதனை படைத்தது. மொன்ற்கோமரியின் மரபு ரீதியான இராணுவ சிந்தனை பொய்த்துப் போனது. அன்றைய நிலையில், இஸ்ரேலில் இருந்த யூத மக்களின் மொத்த எண்ணிக்கை வெறும் ஏழு இலட்சம். அதன் மீது படையெடுத்தவந்த ஐந்து அரபு நாடுகளின் மொத்த மக்கள் தொகை மூன்று கோடியே இருபது இலட்சம். குழந்தைகள் மற்றும் இயலாத முதியோர் நீங்கலாக யூதர்கள் ஒட்டு மொத்தமாக ஆயுதம் ஏந்தினர். அதன் மூலம் ஐந்து நாட்டு அரபு இராணுவத்திற்கு இணையாக ஆட்பலத்தைப் பெற்றனர். புலம்பெயர்ந்து வாழ்ந்த யூதமக்களின் அனுசரணையுடன் பெற்ற ஆயுதங்களைக் கொண்டு படையெடுப்பை முறியடித்து தாம் நிறுவிய புதிய அரசை பாதுகாத்தனர்.

இதேபோன்று, இரண்டாம் உலகப்போரின்போது நிகழ்ந்த ஸ்ராலின்கிராட் மற்றும் லெனின்கிராட் முற்றுகைப்போர்களை மரபுரீதியான இராணுவ சிந்தனைகளுக்கெதிரான முடிவுகளைத்தந்த போர்களுக்கு உதாரணங்களாக மேற்கோள் காட்டலாம்.

சோவியத்யூனியனின் மாபெரும் நிலப்பரப்பை கைப்பற்றிக்கொண்டு முன்னேறிச் சென்ற கிட்லரின் நாஜிப் படைகள் ஸ்ராலின்கிராட், லெனின் கிராட் நகரங்களைக் கைப்பற்ற முயன்றன. அந்த நகரங்களைத் தமது படையான செஞ்சேனையினருடன் இணைந்து பாதுகாப்பதென நகரமக்கள் உறுதியெடுத்தனர். நகர்களின் ஒவ்வொரு வீடும் - வீதியும் செஞ்சேனையின் அரண்களாகின. சோவியத் அரசின் பொருண்மிய வளம் போராயுதங்களைத் தருவிக்க பயன்பட்டது. சோவியத்தின் மைந்தர்கள் உருக்குறுதியுடன் - களத்தில் நின்றனர். அரண்களை உடைத்து உட்புக நாஜிப்படைகள் செய்த அனைத்து முயற்சிகளும் பிசுபிசுத்தன. நாஜிகளை மேலும் முன்னேற விடாது தடுத்ததுடன் - நகர்ந்துவந்து நிலம்பிடித்த கிட்லரின் படைகள்மீது வலிந்த தாக்குதல்களைத் தொடுத்து நாட்டு எல்லையைவிட்டு விரட்டியடித்தனர். இங்கேயும் கிட்லரினதும் அவரது தளபதிகளினதும் மரபுரீதியான இராணுவக் கணிப்புகள் பொய்த்துப்போயின.

நிலம்பிடித்து - நகரும் ஒரு ஆக்கிரமிப்புப் படைக்கெதிரான சமரில் குதித்த விடுதலைச் சேனையுடன் அதன் மக்களும் ஒன்றிணைந்து களம்புகும்போது விடுதலைச்சேனை போரில் வெற்றியைப் பெற்றுக் கொள்கின்றது.

வீரியம் பெற்ற விடுதலைப் போராட்டங்களுக்கு இருக்கின்ற தடுக்கமுடியாத ஒரு சாதக அம்சம் இதுவாகும். இத்தகைய தகைமையைக் கொண்டிருந்த யூதரின் விடுதலைச் சேனையும் - சோவியத்தின் செஞ்சேனையும் இறுதிக்கட்டத்தில் - வெற்றிக்கனி பறித்ததை வரலாறு காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டம் - இன்றைய நிலையில் - உலகில் முன்னணியில் நிற்கும் ஒரு ஆயுதப் போராட்டமாகும். புலிகள் இயக்கத்தின் வீரியமும் - போரிடும் ஆற்றலும் உலகப்புகழ் பெற்றவை. புலிகளின் சண்டைத்திறனை எதிரிகூட மறுக்க மாட்டான்.

சிறீலங்காப்படைகளின் பெரும் பகுதி வன்னிக்களத்திற்கு அனுப்பப்பட்டபின்பும் தாம் நினைத்தபடி நகர்ந்து நிலம் பிடிக்க அவற்றினால் முடியவில்லை. புலிகள் இயக்கத்திடம் உள்ள ஆட்பற்றாக்குறையை இன்றுவரை பயன்படுத்தி நிலம் விழுங்க படைத்தரப்பு முயல்கின்றது.

இன்றைய நிலையில், தேவையான ஆட்தொகையும் அந்த ஆளணியை போரில் ஈடுபடுத்தத் தேவையான பொருண்மியத்தையும் புலிகள் இயக்கம் பெற்றுக் கொள்ளுமாயின், யூத சேனை வரலாற்றுச் சாதனை படைத்ததுபோல, சோவியத்படை நாஜிகளுக்கு தோல்வியை பரிசளித்ததுபோல, புலிப்படையும் களத்தில் பெருவெற்றியீட்டி சிங்களப்படைகளை எல்லைவரை விரட்டியடிக்கும். ★

# உழுத தடம்

கிளிநொச்சி ஒரு இராணுவ பூதம். எப்போதும் தாக்கப்பட்டு அழிக்கப்படமுடியாது என இறுமாந்திருந்த தளம். 1998, செப்டம்பர் 26. நள்ளிரவு தாண்டிய சிலமணியின் பின்னர் தடைகளை உடைத்தன புலிகளின் அணிகள்.

இது ஒரு நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல். 'எம் மீது அவலத்தை விதைத்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு' என்ற தலைவரின் கருத்திற்கேற்ப மக்களை இடம்பெயரவைத்து காடுகளில் பட்டினியால் மழையில் அலைய விட்டவனை எம் நிலத்திலிருந்து துடைத்தெறிந்த சமர்.

பல அணிகள் பங்கேற்ற இச்சண்டையில் முரளியின் தலைமையில் சென்ற அணியின் பணி சற்று முக்கியத்துவமானது; கடினமானது. முகாமைத்தாக்கி அழிக்கும் திட்டத்தில் அந்த முகாமிற்குக் கிடைக்கப்போகும் உதவிகளைத் தடுப்பதென்பது முக்கியமானது. குறைவான எம்பலத்தை வைத்துக் கொண்டு எம்மால் தாக்குதல் தந்திரோபாயங்களாலும், எம் போராளிகளின் உறுதியாலும் மட்டுமே எதிரியின் முகாமை அழிக்கத் திட்டமிடப்பட்டது.

கிளிநொச்சித் தளத்திலிருந்த பிரிகேட்டிற்கு பரந்தன் தளத்திலிருந்து கிடைக்கும் உதவியைத் தடுப்பதற்கான அணியை வெற்றிகரமாகச் செயற்பட வைக்கும் பணி அவர்களுடையது.

சண்டை தொடங்கிவிட்டதிலிருந்து எதிரி கடுமையான எதிர்ப்பை கொடுத்துக் கொண்டிருந்தான். எதிரியின் தடைப்பொறியமைப்பில் வைத்து எம்மைக் கண்டுகொண்டதால் எதிரி முந்திக்கொண்டான். எமக்கோ முகாமின் உள்ளே நுழைவதற்குப் பாதை இல்லாத நிலை. எம்மால் இந்தப் பாதை உடைக்கப்படாவிடின், எது நிகழும்?

விடமுடியாது, உதவியைத் தடுக்கும் அணிகள் தம் பணியைச் செய்யாதுவிட்டால் அன்றைய சண்டையில் நடக்கப்போவது என்ன? அதை முரளியின் அணியில் எல்லோரும் உணர்ந்திருந்தனர்.

அணிகள் முரளியால் மீள ஒழுங்கமைக்கப்பட்டு, மீண்டும் தடைகளை உடைப்பதற்காக எதிரிமீது உக்கிரமான சண்டை நிகழ்ந்தது. சில காப்பரண்கள் கைப்பற்றப்பட்டுவிட்டன. இன்னும் சில காப்பரண்கள் மட்டுமே பிடிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தன. பிடிக்கப்பட்ட அரண்களிலிருந்து பிடிக்கப்படாத இடங்களுக்கு அணிகள் அனுப்பப்பட்டன.

அணிகளை ஒழுங்குபடுத்தி அனுப்பிக் கொண்டிருந்த முரளியின்காலடியில் திடீரென மிதிவெடியொன்று வெடித்தது. எதிரியின் கடுமையான எதிர்ப்பின் மத்தியில் நிலத்தோடு நிலமாக ஊர்ந்து முன்னேறிக்கொண்டிருந்த முரளியின் முழங்கால்கள் வைத்த இடத்தில் மிதிவெடி வெடித்தது. இரண்டு கால்களும் துண்டாடப்பட்டு சிதறிப் போயின. இரண்டு கால்களும் துண்டாடப்பட்ட நிலையில் இரத்தமயமாய் இருந்த முரளியை பின்னர் காவு குழுவினர் கள மெடிசினுக்கு எடுத்துச் சென்றனர்.

பின்னர் நடந்ததைப்பற்றி கூடநின்ற போராளி கூறுகின்றான். 'நாங்கள் மீண்டும் ஒரு தாக்குதலை தொடுத்து தடைகளைத் தாண்டி உள்ளே நுழைந்து கொண்டிருந்தோம் எம்மை ஒழுங்கு படுத்தி அனுப்பிக் கொண்டிருந்த முரளி அண்ணாவின் காலடியில் எதிரி விதைத்த மிதிவெடியொன்று திடீரென முழங்கியது. நாம் கடக்கவேண்டிய பாதையில் ஊசிமுனையில் நடப்பதாய் உணர்ந்தோம். இம்மி பிசகினாலும் வெடிக்கத் தயாராகவிருந்த கண்ணிவெடிவயல்களினூடு நாம் நகர்ந்து கொண்டிருந்தோம். முரளி அண்ணா காயப்பட நமது அணியின் உப தலைவனின் கீழ் காவல் அரண்களை தொடர்ந்து கைப்பற்றிக் கொண்டிருந்தோம். திடீரென ஒரு மணித்தியாலத்தின் பின் வோக்கி எம்மைக் கூப்பிட்டது. அது முரளி அண்ணாவின் குரல். எப்படி.......? எமக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியாகவும் இருந்தது. வோக்கியில் அவரின் குரல் களைத்திருந்தது, ஆனால் உறுதியாய் இருந்தது.

'மச்சான் என்னைப்பற்றிக் கவலைப்படாதேங்கோ. எங்கடபகுதியை பிடிச்சுக் கொடுங்கோ. அது போதும்.' வோக்கியில் கூப்பிட்ட முரளி அண்ணாவின் குரல் இப்படித் தான் சொன்னது. பின்னர் எங்களோடு நின்று காயப்பட்டுச் சென்ற போராளி சொன்னான். 'களமெடிசினில் முதன்முதல் மயக்கம் தெளிந்த முரளி தனது வோக்கியைக் கண்டு விட்டு எடுத்து தனது அணியுடன் கதைத்தான். ஆனால் இன்னும் ஒரு முறை கதைப்பதற்கோ, அங்கே களத்தில் உள்ள நிலமையை அறிவதற்கோ முரளியின் உடலில் உயிர் இருக்கவில்லை.'

இரண்டு கால்களும் இழந்த நிலையில் மரணத்தின் விழிம்பிலும், வேதனையின் உச்சத்திலும் இருக்கக்கூடிய அவன் உயிர், மயக்கம் தெளிந்ததும் ஐயோ எனக்கத்தவில்லை. தன் அணியை உற்சாகப்படுத்தும் உறுதியிலிருந்த அந்த உன்னதமான உயிரின் உணர்வுகள் எத்தனை அற்புதமானவை. அசாத்தியமான அவனின் உறுதி அவ்விடத்தில் அந்நேரத்தில் ஒரு சம்பவம்தான். ஆனால் எமது சரித்திரத்தில் அது ஒரு பதிவு.

'ஒரு போரின் வெற்றியை தீர்மானிப்பது ஆட்பலமோ - ஆயுதபலமோ அல்ல, அசைக்கமுடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.' என்ற தலைவனின் உணர்வுகளை உள்ளத்தில் சுமந்து வாழ்ந்த இலட்சிய வீரன் இவன். இவனதும் இவன்போன்ற புலிவீரர்களதும் உறுதிதான். தமிழீழத்திற்கான தடைகளின் வெட்டுவாள்கள்.

ஜெயசிக்குறுய் படைகள் தம் நடவடிக்கை தொடங்கி ஓராண்டை அண்மித்துவிட்ட நேரமது. வெற்றிநிச்சயம் என வந்தவர்களின் வெற்றிகள் கேள்விக்குறியான காலமது. இராணுவம் தேடியது ஒரு உடனடி வெற்றியையே. இராணுவத்தை பகடையாக்கிவிட்ட அரசிற்கு வேண்டியது ஒரு வெற்றிச்செய்தியே. அரசு படைகள் எம்நிலைகள் நோக்கி ஏவிவிட எம்மிடம் அடிவேண்டி படைகள் பின்புறமும் ஓடமுடியாமல் திண்டாட, மீண்டும் மீண்டும் ஒரு இராணுவ வெற்றியை அரசியல் தேவைக்காகக் காட்ட அவர்கள் முயன்றனர்.

20 சித்திரை 1998ன் ஒரு காலைப் பொழுதின் போது!

எதிரி மாங்குளத்தை எப்படியும் அன்று பிடித்துவிடவேண்டும் என்ற முடிவோடு இருந்தான். இதற்காக ஒலுமடு பகுதியூடாகவும், கனகராயன் ஆற்றுப்பகுதியாலும், மூன்று முறிப்பாலும் எதிரிசண்டையைத் தொடங்கியிருந்தான். எம் போராளிகள் சிலரின் சாவே அவனுக்கு அவனது இலக்கையெட்டும் நிலையை ஏற்படுத்தப் போதுமானதாக இருந்தது.

ஆக, சில பத்துப் போராளிகளே காவலில் நின்ற எம் காவலரண் தொடரில் ஒரு பகுதியை நோக்கி ஒன்றல்ல, இரண்டல்ல பல ராங்குகள் அணிவகுத்து முன்னேறின. முன்னேறுவது, பின்னர் தரித்து நின்று எம் நிலைகள்மீது அடித்து, பின் முன்னேறுவது என எதிரி ராங்குகள் முன்னேறிக்கொண்டிருந்தன.

எண்ணிக்கையில் நாம் குறைந்திருந்தோம். எதிரி வருவது உருக்கு இயந்திரங்களில். எம்மிடம் இருந்ததோ சாதாரண துப்பாக்கிகள். நாம் கடக்கட எதிரி முன்னேறினான். எம்மவர் இயன்றவரை சுட்டனர். ஆனால் பிரயோசனம் என்ன? சுட்ட ரவைகள் எல்லாம் எதிரியின் உருக்கு இயந்திரங்களில் பட்டுச் சிதறி விழுந்ததைத்தவிர.

நவீன கனரக கவச எதிர்ப்பு ஆயுதங்கள் அன்று அவ்விடத்தில் எம்மிடம் இருக்கவில்லை. எம்மால் ராங்குகள் மீதான எதிர்ப்பைக்காட்ட முடியாத துரதிஸ்ட நிலை. எம்மில் பலரின் உயிர்களைக் குடித்துவிட்டு ராங்குகள் சில எம் காவலரண்கள் மீதும் ஏறிவிட்டிருந்தன.

எல்லாம் முடிந்த நிலை, எஞ்சிய சில போராளிகள் மட்டுமே காவலரணில் நின்றனர். இப்போது அந்தச் சண்டையை தீர்மானிக்கும் பொறுப்பு அங்கு எஞ்சிநின்ற ஒரு சிலர் மேலேயே. அவர்களின் முடிவே அன்றைய சண்டையின் முடிவு. நாளைய சமரின் முடிவு. காவலரணில் ஏறிவிட்ட ராங்கை ஏதாவது செய்தாகவேண்டும் என்றான நிலை.

அன்றைய நிலையில் எம்காப்பரண் வேலியை உடைத்து, எம் காவலரண் வேலியூடாக எதிரியின் நகர்வு என்பதுகூட ஒரு வருடப்போர் உழைப்பை வீணாக்கிவிடும். எதிரியின் ஜெயசிக்குறுய் எனும் கனவு பலித்துவிடும். இதுவரை ஜெயசிக்குறுவில் நாம் இழந்து விட்ட உயிர்களும் பட்டுவிட்ட கஸ்ரங்களும் அர்த்தம் அற்றதாகிவிடும். இத்தனைக்கும் மேலாக எதிரியின் உடனடி இலக்கு எட்டப்பட்டுவிடும்.

இத்தனையும் சாதித்துவிட முயன்றது எதிரியின் ராங்கிப்படையின் நகர்வு. இத்தனையும் நிகழ்ந்துவிட அனுமதித்தது அன்று எம்மிடம் கைவசம் இல்லாத ராங்கி எதிர்ப்பு ஆயுதங்கள்.

எப்படி விடமுடியும். இரத்தமும் சதையுமாகிவிட்டன எம் காப்பரண்கள். அதை எப்படிவிட முடியும் எதிரியிடம்.

முடிவு? வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது என்பதை அங்கே எஞ்சி நின்றவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதில் அவன் இறுதித் தீர்மானம் எடுத்திருந்தான்.

தன் தேசத்திற்காக எதனை அவனால் உயர்ந்தபட்சம் சாதிக்க முடியுமோ அதை அவன் சாதித்தான். தன் உயிரால் கூடிய பட்சம் செய்யக்கூடியதை தன் முடிவாக எடுத்தான்.

தன் தலைக்கு மேலேயுள்ள காவலரணில் ஏறிய ராங்கி ஒன்றினுள் குண்டுடன் பாய்ந்தான் அந்தப் போராளி. அவன்தான் கப்டன் அன்பழகன். எதிரி ராங்க் குண்டினால் வெடித்ததை பார்க்கக் கூட அங்கே அவன் உயிருடன் இருக்கவில்லை.

உண்மையில் அது ஒரு மயிர்க்கூச்செறியும் சம்பவம். அன்றைய கள நிலவரத்தில் புதிதாக உதவிபணிகள் எடுக்கப்பட்டு, உள்நுழைந்துவிட்ட ராங்குகளை கலைப்பதில் ஏற்படப் போகும் சிக்கலை தனது போர் அனுபவம் மூலம் அவன் தெரிந்திருந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக தனக்கிருந்த கடமையை அவன் உணர்ந்திருந்தான். தன்னில் தங்கிநின்ற ஒரு சண்டையை, ஒரு சமரின் முடிவை, அந்தச் சமரின் முடிவால் தான் நேசித்த மக்களுக்கு ஏற்படப்போகும் தாக்கத்தை விளங்கியிருந்தான். அதனால் தான் அவன் தளபதிகள் 'அவன் தன் தேசத்திற்குச் செய்யவேண்டியதை உணர்ந்திருந்தான், உறுதியான புலிவீரன் என்பதை நிரூபித்தான்' என்று கூறுந்தக்கவாறான புலிகளுக்கே தனித்துவமான அந்த வீர முடிவை எடுத்தான்.

ஆம்! அன்றைய சண்டை.. அதனை மாற்றியது கப்டன் அன்பழகனே. அன்று ராங்கிகள் நுழைந்த சொற்ப நேரத்தில் அந்தப்பகுதி எதிரிகளால் கைப்பற்றப்படவிருந்த அபாயத்தை நீக்கியது அவனின் அந்த வீரச்செயல்.

'சத்தியத்திற்காக சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதரண மனிதப்பிறவியும் சரித்திரத்தைப்படைக்கமுடியும்' என்ற தலைவரின் சிந்தனையை செயல் வடிவாக்கியவன் இந்தப் போராளி.

- அன்பு



மயிர்க்கூச்செறியும் ஒரு தியாகத்தின் முடிவில் அன்பழகன் முன் மண்டியிட்ட அவ் அழிவியந்திரம்

# வீரத்தின் வித்துக்கள்



# என்ன வளம் இல்லை தமிழீழத்தில் ?

'என்ன வளம் இல்லை தமிழீழத்தில்? ஏன் தங்கி வாழவேண்டும் சிங்களத்தில்?' எங்கும் எல்லாப் பிரதேசங்களிலும் ஏதோ ஒரு வகை வளத்தைக் கொண்டு விளங்கும் எமது தமிழீழத்தில் எல்லாப் பிரதேசங்களுக்கும் பொதுவான வளமாக காணப்படுவதுதான் கடல்வளம். இது தமிழீழத்தை சூழ 600 மைல் நீளமுடைய கடலினையும் வோர்ச் கடலடித்தள மேடை, பேதுரு கடலடித்தள மேடை என்னும் கடலடித்தள மடைகளையும் உடையதாகக் காணப்படுகிறது. இவ்வாறான கடலடித்தள மேடையிலேயே அதிகளவிலான மீன்வகைகள் காணப்படுகின்றன. இக் கடற்பரப்பில் 1983ஆம் ஆண்டு கடல் வலயத் தடைச் சட்டத்தினை அமுலாக்குவதற்கு முன்னர் 1983 ஆம் ஆண்டு தொண்ணூற்றி ஆறாயிரத்து இருநூற்றி நாற்பத்தெட்டு (96248) மெற்றிக் தொன் மீன் வகைகள் பிடிபட்டதாக தமிழீழத்தின் புள்ளி விபரத் தரவுகள் நூலில் கூறப்படுகின்றது. இது கடல்வலய தடைச்சட்டத்தின் பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டு சென்றுள்ளது. இன்று மிகவும் பின்தங்கிய நிலையிலேயே மீன் பிடித் தொழிலை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இத்தொழில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டாலும் ஓரளவுக்கு மக்களின் சேவையினைப் பூர்த்திசெய்யக் கூடியதாகவே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அதாவது சுதந்திரத் தமிழீழத்தில் இத் தொழில் மிகவும் வளர்ச்சிபெற்று ஏற்றுமதி வருமானத்தினை அதிகளவில் பெற்றுத்தரக் கூடியதாக காணப்படும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்நிலையில் 'இறால், நண்டு, சிங்கறால், கணவாய், கடலட்டை, சுறாச் செட்டை, சங்கு, சங்கு நகம், சுறாநெய், அழகியல் மீன்கள், முத்து என்பன ஏற்றுமதியில் அதிகளவு வருவாயினை பெற்றுத் தருவனவாகக் காணப்படுகின்றன.' தமிழீழம் அமையும் வரை காத்திராமல் நீரேரிகள், உப்பாறுகள், கடல் நீரேரிகள் என்பவற்றில் அதிகளவில் பிடிக்கக் கூடியதாகக் காணப்படும் இறாலின் தன்மையினையும் வாழ்க்கையினையும், பராமரிப்பினையும் நோக்குவோம்.

இறால்கள் பெரும்பாலும் கடல் நீரேரிகளையே வாழ்விடமாகக் கொண்டவை என்பது நாம் அறிந்ததே. என்றாலும் அவற்றின் வாழ்க்கை கடலை ஒட்டி அமைந்திருக்கும் உப்பாறுகளுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. உப்பாறுகளுக்கும், கடலுக்கும் இடையே கூட தொடர்பு உண்டு. சில சமயங்களில் கடலில் நீர்ப்பெருக்கம் ஏற்படுகின்ற போது கடல் நீரானது உப்பாற்றுக்கு பாய்ந்து கொள்ளும். கடல் நீர்ப் பெருக்கு குறைவடைந்ததும் கணிசமான பகுதி நீர் கடலுக்குச் சென்றுவிடும். இவ்வாறே மழைக் காலங்களில் உப்பாற்றுக்கு வரும் ஆற்று வெள்ளமானது கடலை நோக்கிப் பாய்வதும் உண்டு. இவ்வாறான நீர்ப் போக்குவரத்தும் இறால்களின் இனப்பெருக்கப் பணியுடன் தொடர்புகொண்டதாக உள்ளது.

இறால்கள் கடல் நீரில் தான் இனப் பெருக்கம் செய்கின்றன. ஆனால் அவ்வாறு இனப்பெருக்கம் செய்யப்பட்ட இறால் குஞ்சுகள் கடலிலேயே வளர்ந்து ஆளாவதில்லை. கடலில் உற்பத்தியான குஞ்சுகள் உடனே கடலுக்கும், உப்பாற்றுக்கும் இடையிலே இருக்கும் நீர் வழியைப் பயன்படுத்தி உப்பாற்றுக்கு வந்து சேருகின்றன. உப்பாற்று நீரில் அவை வளரத் தொடங்குகின்றன. இவ்வாறு வளரும் குஞ்சுகள் முதிர்ச்சியடைந்து இனப்பெருக்கப் பக்

**தொகுப்பு இளவரசன்**

குவத்தை அடைந்தவுடன் இனப் பெருக்கம் செய்வதற்காக கடல் நீரை நோக்கி திரும்பிச் செல்கின்றன. இவ்வாறு ஒரு சுற்றோட்டப் பாதையிலேயே இறால்களின் வாழ்க்கைமுறை அமைந்ததாகக் காணப்படுகின்றது. இவற்றின் இனப் பெருக்கல் காலமாக கோடைகாலம் முடிவடைந்து மழைக்காலம் தொடங்குவதற்கு இடைப்பட்ட காலத்திலேயே அமைந்ததாகக் காணப்படுகின்றன.

உப்பாற்றில் வளர்ச்சியடைந்த இறால்கள் கடலுக்குச் செல்ல முற்படுகின்ற காலப்பகுதியாகிய கோடைக்கும் மாரிக்கும் இடைப்பட்ட காலத்தில் பெருமளவு உப்பாறுகளின் முகத்துவாரங்கள் மண் மேடுகளால் அடைக்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன. இதனால் முதிர்ச்சியடைந்த இறால்கள் கடலை சென்றடைய முடியாத நிலை ஏற்படுகின்றன. ஏனெனில் முகத்துவாரத்தை அடைந்த இறால்கள் பெருமளவு பிடிக்கப்படும். அது மட்டுமன்றி முதிர்ச்சி அடைந்த இறால்கள் கடலிலேயே வாழக்கூடிய தன்மையுள்ளனவாக அவற்றின் உடலமைப்பு காணப்படுகின்றமையால் தாமாகவே அழிவடைகின்றன. இதேவேளை கடலில் உற்பத்தியாகும் இறால் குஞ்சுகள் கடலில் வளர்ச்சியடைந்து முதிர்ச்சியடைய முடியாத உடலமைப்பினை கொண்டமையினால் அவை உப்பாறுகளை நோக்கி வந்தடைய முற்படுகின்ற வேளையில் உப்பாற்றுக்கும், கடல் நீருக்கும் இடையில் காணப்படுகின்ற தடையினால் கடலிலேயே பெருமளவு அழிந்து போய்விடுகின்றன. மேலும் உப்பாறுகளில் நுண்ணுயிர் தாவரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இந்தத் தாவரங்கள் சேற்றுப் பாங்கான இடத்திலேயே அதிகளவு வளர்ச்சியடையும். இந்தத் தாவரங்களையே அதிகளவு இறால் குஞ்சுகள் விரும்பி உண்ணுகின்றது. மற்றும் இறால் குஞ்சுகளுக்கு ஏற்ற பிராணவாயுவும் சதுப்பு நிலத்திலேயே காணப்படுகின்றது. சதுப்பு நிலத்தில் தரை மட்டத்தில் அதிகளவு சிறு புழுக்களும், பூச்சிகளும் வாழ்கின்றன. இவற்றை உண்பதற்கு இறால்கள் உப்பாறுகளை நோக்கி வந்து தங்கி வாழ்கின்றன.

நமது தமிழீழத்தில் ஏறக்குறைய 5577 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய கடல் நீரேரிகள் காணப்படுகின்றன. நாங்கள் இந்த உப்பாறுகளிற்கும், கடலுக்கும் இடையில் அடிக்கடி ஏற்படும் மணல் மேடுகளை சேறு விடாது அள்ளுவதன் மூலம் தவிர்த்து தொடர்ச்சியாக உப்பாற்றுக்கும், கடலுக்குமான தொடர்பை தொடர்ந்து தடையின்றிப் பேணி வந்தால் இறால் உற்பத்தியினை தொடர்ந்து மேற்கொள்ளலாம். அத்துடன் உப்பாறுகளில் நுண்ணுயிர் தாவரங்கள் அதிகளவில் வளர்வதற்கும் வழிவகைகள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாம் இறால் உற்பத்தியினை அதிகரிக்கமுடியும்.

**







# விடுதலை வானில் சிறகு விரித்தவள்

## லெப்.கேணல் செல்வி

அவள் ஒரு சாதாரண பெண். தன்னையும் தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் நேசிக்கத் தெரிந்த பெண். மற்றவர்களின் மகிழ்ச்சியில் தன்னை மறக்கவும், மற்றவர்களின் துயரத்தில் தானும் மூழ்கவும் கற்றுக் கொண்டவள். அதனால்தான் தன் இளமைக்காலத்தின் கனவுகளை தன்னைச் சுற்றி மட்டுமே வளைந்துகொள்ள அவளால் முடியவில்லை. தன் ஊரின் ஒவ்வொரு அவலங்களுக்கும், உறவுகளின் ஒவ்வொரு வேதனைகளுக்கும் காரணம் தேடினாள் 'விடுதலை' என்ற களிம்பினால் மட்டுமே சுகப்படுத்த கூடிய காயங்கள் இவை என்பதைத்தான் சின்ன அறிவுக்கு எட்டிய வரை புரிந்து கொண்டதன் விளைவாக நீண்ட நெடும் போராட்ட வரலாற்றிலுள் தானும் ஒரு வரலாறாய் தடம் பதித்துக் கொண்டாள்.

அது இரண்டாவது தமிழீழப்போர் ஆரம்பமாகிவிட்ட காலகட்டம். இந்திய இராணுவ நெருக்கடி காலகட்டத்தில் மன்னாரில் இருந்து புலம்பெயர்ந்து தமிழகம் சென்ற செல்வி (சிவஞானம் ஜெனிற்றா) நாடு திரும்பியிருந்தாள் இந்தியப்படைகளின் எச்சங்கள் முற்றிலும் களைந்து போக முன்னரே சிறீலங்காப் படைகளின் அட்டகாசத்தால் தமிழீழம் மீண்டும் ஒரு குருசேத்திரம் ஆக இருந்தது தனது நீண்ட நாள் கனவு நினைவாகும் வேளை இதுவென உணர்ந்து கொண்ட செல்வி ஆயிரத்தி தொள்ளாயிரத்தி தொண்ணூறாம் (1990) ஆண்டு மூன்றாம் மாதமளவில் ஒரு காட்டுப்பாசறையில் தனது ஆரம்ப பயிற்சியைத் தொடங்கினாள். பல வைரங்களை பட்டை தீட்டி ஒளிர்செய்த பயிற்சி ஆசிரியரான லெப்.கேணல் மாதவியிடம் தான் செல்வியும் பயிற்சி பெற்றாள்.

எப்போதுமே கலகலப்பான அவளின் ஆற்றல்கள் வரம்பற்றவை. எந்த ஒரு வேலையும் கண் பார்த்தால் கைசெய்யும் என்று கூறும் அளவுக்கு மிக நேர்த்தியாகச் செய்து முடிப்பாள். பயிற்சிப் பாசறையிலும் படையணிப் பாசறையிலும் விசேட தினங்களில் அரங்கேற்றப்படும் கலை நிகழ்வுகளில் பலவேலைகளைத் தன் தலையில் சுமந்து கொண்டவளாக ஓடித் திரிவாள். அழகாக நடனமாடுவாள், பாடுவாள் தன் எண்ணங்களை வண்ணமாக்கி ஓவியம் தீட்டுவாள், கவிதை எழுதுவாள், கைப்பணி வேலைகளைச் செய்வாள் மொத்தத்தில் அந்த நேரங்களில் எல்லாம் அற்புதமான ஒரு கலைக் களஞ்சியமாகவே தென்படுவாள். அத்தனை மென்மையான இயல்புகளைக் கொண்ட செல்வியிடம் பல இறுக்கமான இயல்புகளும் இருந்தன. இருகுவில் எவருக்கும் அடங்கிப் போவது என்பது அவளது அகராதியில் கிடையாது. தன் மனதில் நியாயம் எனப்பட்டுவிட்டால் அதை நிரூபிப்பதற்காக எவருடனும் சவால் விடத்தயாராகி விடுவாள். சக போராளிகளுடன் புரிந்துணர்வுடன் பழகுபவள், அவர்களின் சுமைகளைத் தானும் சேர்ந்து சுமப்பதிலேயே திருப்தி அடைவாள்.

இவளின் முதற்களமாக விரிந்தது பலாலிப் பெரும்தளம். அப்போது மகளிர் படையணிகள் பலாலியின் ஒருபகுதியில் தமது நிலைகளையும் அமைத்திருந்தன ஆரம்பப்பயிற்சியை முடித்தவளாக அங்கே செல்வியும் காவலில் நின்றாள் அது ஒரு சாதாரண களமல்ல பல முக்கிய சண்டைகளைக் கண்ட களம். எமது மாவீரர்கள் பலரது குருதியில் தோய்ந்த நிலம்.

அடுத்ததாக மாங்குளம் முகாம் தகர்ப்புச் சமரில் பங்கெடுத்தாள். செல்வியைப் பொறுத்தவரை அதுதான் அவள் பங்கெடுத்த முதலாவது திட்டமிட்ட தாக்குதல்

> 'இதோ நூற்றி ஐம்பது மீற்றரில் வந்துவிட்டான்.... இதோ நூறு மீற்றரில் வந்து விட்டான்..... மாட்டுப்பட்டி மாதிரி வருகிறான்..... நாங்கள் அடிக்கிறோம்" என கணத்துக்குக் கணம் நிலைமைகளை அறிவித்தபடியே சண்டை செய்து கொண்டிருந்தார்.

களம். அங்கே ஏழுபேர் கொண்ட ஒரு அணியின் தலைவியாகச் செயற்பட்டாள் தொண்ணூற்று ஓராம் ஆண்டு (91) ஆகாயக் கடல் வெளித்தாக்குதலில் பொதுப்பயன்பாட்டுத் துப்பாக்கி (GPMG) அணிக்குத் தலைவியாகச் செயற்பட்டாள். அதன்பின் தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு (92) பலவேகய எதிர்ச்சமர் நடவடிக்கையிலும் பங்குபற்றினாள் அதே ஆண்டு கட்டைக்காட்டில் ஆயுதக்கிடங்கு கைப்பற்றப்பட்ட சமரில் திறமையாகச் செயற்பட்டமைக்காக அச்சமரில் பங்குபற்றிய அனைத்துப் போராளிகளுக்கும் தமிழீழத் தேசியத் தலைவரால் பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டனர் அதில் செல்வியும் ஒருத்தியாக தேசியத் தலைவரின் பாராட்டையும் பரிசையும் பெற்றுக் கொண்டாள்.

பலாலிப் பத்தமேனிப்பகுதியில் இராணுவத் தொடர்காவலரண்கள் தகர்க்கப்பட்ட தாக்குதலில் பங்குபற்றினாள். இதன் பின்னரான காலப் பகுதிகளில் பெரும்பாலும் பயிற்சி ஆசிரியராகவே செயற்பட்டாள். இதயபூமி, பூநகரித் தாக்குதல்களுக்கு சண்டைப் பயிற்சி ஆசிரியராகச் செயற்பட்டாள். எமது இயக்கத்தின் இராணுவ ரீதியான வளர்ச்சியின் ஒரு முக்கிய அம்சமாக அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்பட்டது. செல்வியும் அப்பயிற்சிக் கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்பட்டாள். இவளின் இயல்பான ஆற்றல்கள் மேலும் வளர்த்தெடுக்கப்பட்ட களங்களில் இது முக்கியமானதாகும்.

இதேவேளைதான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகின. பயிற்சிக் கல்லூரியில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய செல்வி சிறிதுகாலம் மகளிர் படையணிக்குரிய நிர்வாகப்பிரிவு வேலைகளைக் கவனித்தாள். இதன் பின்னர் சூரியக்கதிர் நடவடிக்கைக்கான எதிர்த்தாக்குதலுக்காக மீண்டும் களமுனைக்கு வந்தாள். தோட்ட வெளிகளும், கட்டடக் காடுகளுமான அந்தச்சமர் அரங்கு பல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தது. ஓயாத அலைகள் 01 தாக்குதலிலும் கிளிநொச்சி மீதான சத்ஜெய எதிர்ச்சமரிலும் பங்குபற்றினாள். இவ்விரு சண்டைக்களங்களிலும் முதுகு, கழுத்துப்பகுதிகளில் விழுப்புண்களை பெற்றாள். அதன் பின் தொண்ணூற்றி ஏழாம் ஆண்டு (97) ஆனையிறவு பரந்தன் தளங்கள் மீதான தாக்குதலிலும் திறமையாகப் பங்காற்றினாள்.

வன்னி மண் மீதான எதிரியின் படையெடுப்பான ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்கு எதிரான சமர் முழுவதிலுமே செல்வி பங்கெடுத்தாள் என்றே கூறலாம். இச்சமரின் ஆரம்பக்கட்டங்களில் நெடுங்கேணிப்பகுதியிலேயே மாலதி படையணியின் அணிகள் தாக்குதலில் பங்குபற்றின அந்தாக்குதலில் செல்வியும் பங்கெடுத்தாள். ஜெயசிக்குறுய் எதிர்ச்சமர் பிரதான வீதி வழியே உக்கிரம் அடைந்தபோது மாலதி படையணியின் அணிகளும் இடம் மாற்றப்பட்டன. இக்கால கட்டத்தில் மாலதி படையணியின் ஒரு பிரதான தாக்குதல் அணிக்கு தலைமை தாங்கி வழிநடத்திய செல்வியைப் பற்றி மாலதி படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் விதுசா அவர்கள் குறிப்பிடும் போது செல்வி மிகுந்த தன்னம்பிக்கையான போராளி அவளின் செயற்பாடுகள் பல வகைகளிலும் எமது படையணியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

அவற்றைப்பற்றி நான் குறிப்பிட வேண்டுமானால் எவ்வளவோ விடயங்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் அவருக்குக் கொடுக்கப்படும் எந்தவொரு வேலையிலும் ஒரு தனித்துவமான நேர்த்தியையும் கடமையுணர்வையும் நான் ஆரம்பம் முதலே அவதானித்துள்ளேன்.

அவரைப் பற்றி நான் மிகவும் பெருமிதம் அடையும் சம்பவம் ஒன்று ஜெயசிக்குறுச் சமரில் இடம்பெற்றது அது புளியங்குளம்பகுதியில் நடந்தவொரு எதிர்த்தாக்குதல் சம்பவமேயாகும். அந்த புளியங்குளம் நிலைக்கு எமது படையணிகள் போனபோது அனைவருமே உறுதிப்பாட்டோடுதான் போனார்கள். ஏனெனில் நெடுங்கேணிப் பகுதியில் நடந்த சண்டையில் எமது படையணியின் லெப்.கேணல் ரஞ்சி உட்பட பல போராளிகள் வீரச்சாவடைந்த சம்பவம் பலத்த வேதனையை அனைவருக்கும் ஏற்படுத்தியிருந்தது.


அத்துடன் புளியங்குளத்தில் எமது நிலைகளை உடையவிடக்கூடாது. இங்கு எதிரியின் முன்னேற்ற முயற்சியை முறியடிப்பதன் மூலம் ஜெயசிக்குறுயின் முன்னெடுப்பையே முறிக்கவேண்டும் என்பதில் எமது தேசியத் தலைவர் அவர்கள் மிகவும் உறுதியாக இருந்தார். இந்த வேளையில்தான் எமது அணிகள் புளியங்குளம் பகுதியில் முன்னணி நிலைகளை அமைப்பதற்காகச் சென்றன. மிகுந்த நம்பிக்கை அடிப்படையிலேயே எமது தலைவர் இந்த அனுமதியை எங்களுக்கு வழங்கியிருந்தார்.

புளியங்குளம் பகுதியில் எமது நிலைகளை அமைத்துக் கொண்டபோது இந்த இடத்தில் எதிரி முன்னேறி வரும்போது நல்ல பதிலடி கொடுக்க வேண்டும் என்ற மன ஓர்மத்துடன்தான் ஒவ்வொரு போராளிகளும் நின்றனர். அங்கே அணித்தலைவியாக இருந்த செல்வி மிகவும் திறமையாக அணிகளை உற்சாகப்படுத்தி வைத்திருந்தார்.

இதேவேளை பெரியமடு பனிக்கநீராவிப் பகுதியில் ஊடுருவித் தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு பிரதான தளபதிகளால் திட்டம் தீட்டப்பட்டுக்கொண்டிருந்தது இருபத்தி மூன்றாம் திகதி ஆறாம் மாதம் தொண்ணூற்றி ஏழாம் ஆண்டு (97) ஒரு இராணுவ முன்னேற்ற நடவடிக்கை புளியங்குளம் பகுதியில் எதிரியால் மேற்கொள்ளப்பட்டது. அங்கு நிலை கொண்டிருந்த செல்வியின் அணியினரே இச்சண்டையை எதிர்கொண்டனர். அதிகாலை ஐந்தரை மணிக்கு ஆரம்பித்து மாலை ஆறு மணிவரை நீடித்த தாக்குதலில் டாங்கிகள் சேதமாக்கப்பட்டதுடன் ஒரு டாங்கி முற்றாக அழித்து நாசமாக்கப்பட்டது ஒரு அதிகாரி உட்பட பதினைந்திற்குமேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முன்னேற்ற முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்ட எதிரி பின்வாங்கினான். மறுநாள் வெற்றிகரமாக பெரியமடு ஊடுருவித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதில் பிரச்சனை என்னவென்றால் இருபத்துமூன்றாம் திகதி முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்டமைதான் பெரியமடுத் தாக்குதலின் வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்தது. செல்வியின் திறமையிலேயே அது தங்கியிருந்தது எனக் குறிப்பிட்டார் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி விதுசா அவர்கள்.

ஜெயசிக்குறுய் களம் எமது போராட்ட வரலாற்றில் பல வளர்ச்சி பாதைகளுக்கும் இடமளித்த களமாகும். இங்கே பல புதிய பொறுப்பாளர்களும், தளபதிகளும் உருவானார்கள். அந்த வகையில் செல்வியின் களமுனைச் செயற்பாடுகள் தொடர்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# சுதந்திரத்தைத் தேடி...

பாக விடுதலைப் புலிகளின் ஜெயசிக்குறுய் எதிர்சமர் தளபதி கேணல் கருணா அவர்கள் இவ்வாறு கூறினார், தாண்டிக்குளம் ஊடுருவித் தாக்குதலுக்காக நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கும்போது ஒரு பயிற்சி ஆசிரியராகத்தான் செல்வி எனக்கு அறிமுகமானார். நீண்டநாட்கள் பயிற்சி ஆசிரியராக இருந்த அனுபவம் அவரை ஒரு சிறந்த அணித்தலைவியாக வெளிப்படுத்தியது. ஓயாத அலைகள் 02 சண்டைக்குப்போகும் வரையும் செல்வி ஜெயசுக்குறுய் எதிர்ச்சமரில்தான் பங்கெடுத்துக்கொண்டிருந்தார். இது அவருக்கு நிறைந்த அனுபவங்களைக் கொடுத்தது. ஜெயசுக்குறுயில் செல்வியின் அணி எதிரியின் பல முன்னேற்ற முயற்சிகளை எதிர் கொண்டுள்ளது.

புதூர்சந்திப் பகுதியில் மாலதி படையணியினர் நின்றபோது அப்பகுதியில் முன்னேறிய விசேட அணியினரை எதிர்த்துத் திறமையாகச் சண்டை செய்திருந்தார்கள். அதுபோலவேதான் மன்னகுளம் பகுதியில் நடைபெற்ற சண்டையும் அமைந்திருந்தது. அந்தப்பகுதியால் எதிரி முன்னேறுவான் என்று ஓரளவு முன்னரே எங்களுக்குத் தெரியும். அணிகள் உசார்ப் படுத்தப்பட்டே வைக்கப்பட்டிருந்தனர். எனினும் அந்தப் பகுதியால் முன்னேறிய படையணிகள் சிறீலங்காவின் சிறப்புப் படையணிகள் (Commandos) ஆகும். எமது நிலைகளை உடைத்துக் கொண்டு முன்னேறிய படைகளை எதிர்த்து செல்வியின் அணியினர் பலத்த சண்டைசெய்தனர். அங்கே அவன் உடைத்து வந்த பாதையின் அளவு சுமார் 100 மீற்றராகும். அதை மேலும் விரிவுபடுத்த விடாமல் இவர்கள் தடுத்துச் சண்டை செய்து கொண்டிருந்தனர். எமது மேலதிக அணிகள் அப்பகுதியை சென்றடைந்து முறியடிப்புத் தாக்குதலை நடத்துவதற்கு செல்வியின் அணியினரின் செயற்பாடு பக்கபலமாக இருந்தது. ஏனெனில் எதிரி பிடித்த பாதையின் அகலத்தை 500 மீற்றருக்குமேல் விரிவுபடுத்தியிருந்தால் எம்மால் வெற்றிகரமான முறியடிப்புத் தாக்குதலை நடத்த முடியாமல் போயிருக்கும். ஆனால் இந்தப் பிள்ளைகள் அதற்கு இடமளிக்கவில்லை. ஒரு இடதுபக்க காவலரணில் நின்று செல்வியும், அதற்கு மறுபக்க காவலரணில் நின்று செல்விக்கு அடுத்த பொறுப்பாளரான மேஜர் கனிபாவும் சண்டைசெய்து கொண்டிருந்தனர். அத்துடன் மேஜர் நீலாம்பரி என்ற போராளி இந்தச் சண்டையில் மிகவும் திறமையாகச் செயற்பட்டிருந்தார். ஜெயசுக்குறுய் சமரில் சிறீலங்காவின் சிறப்புப் படைகளை (Commandos) முறியடித்த சண்டைகளில் மன்னகுளம் சண்டை மிகவும் முக்கியமானது. இதில் செல்வியின் வழிநடத்தல் மிகவும் திறமையானது.

செல்வியின் தனிப்பட்ட குணநலன்களைப் பார்க்கும்போது அவர் எதையும் இலகுவில் விட்டுக் கொடுக்காத பிடிவாத குணமுள்ளவர். எதிலும் தனித்துவத்தை விரும்புபவர். எந்த வேலை என்றாலும் மற்றவர்களின் தலையீடு இல்லாமல் தானே தனித்துவமாய் நின்று செய்து முடிக்கவேண்டும் என்ற விருப்பம் உள்ளவர். இவரது இந்த இயல்பை உணர்ந்து கொண்டு இவருக்கு வேலைகளைக் கொடுத்து சரியான விளக்கமும் கொடுத்து விட்டால் போதும். அந்த இடத்திற்கு வேறு எந்தத்தளபதிகளும் தேவையில்லை. தனது வேலையை கனகச்சிதமாகச் செய்து முடித்திருப்பார். அத்துடன் எதையுமே வெளிப்படையாகக் கதைக்கின்ற சுபாவம் உள்ளவர். சரியோ பிழையோ தனக்கு நியாயம் எனப்பட்டதை எந்தத் தயக்கமுமின்றிக் கதைப்பார். சில சந்தர்ப்பங்களில் தனது பகுதித் தளபதிமாருடன் கூட வாக்குவாதப் படுவார். தனது அணியை வளர்ப்பதில் அதிக அக்கறை உள்ளவர். பிள்ளைகளின் நலனைக் கவனிப்பது, அவர்களுடன் கலந்து பழகுவது, எந்தவேலையாயினும் சேர்ந்து நின்று செய்வது என தனது அணியுடன் இரண்டறக் கலந்து நிற்பார். பாதுகாப்பரண்களை அமைக்கும் பொழுது தானும் பதுங்குகுழிகளை வெட்டுவார். தனது தோளிலும் மரக்குற்றிகள் சுமந்து கொடுப்பார். இப்படியான இவரின் செயற்பாடுகள்தான் சண்டைகளில் அவரது அணியினர் பல சாதனைகளைச் செய்வதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்திருந்தன.

எமது படையணிகளுக்குரிய இராணுவ விஞ்ஞான வகுப்புகளில் தவறாது கலந்து கொள்வார். தனக்கு விளங்காத ஒரு விடயத்தை இலகுவில் விட்டுவிடமாட்டார். துளைத்துத் துளைத்துப் பல கேள்விகள் கேட்பார். எப்படியும் சரியான பதில் கொடுத்தே தீரவேண்டும். தான் கற்ற விடயங்களை தனக்குக் கீழேயுள்ள போராளிகளுக்கு திறமையாகக் கற்றுக் கொடுப்பார்.

ஜெயசிக்குறுய் சமரில் இன்னொரு



நெருக்கமான சந்தர்ப்பத்தையும் செல்வியின் அணியினர் சந்தித்தனர். மாங்குளம் சந்தியிலிருந்து வலப்பக்கமாக ஒன்றரைக் கிலோமீற்றர் வரையான காவலரண் பகுதிகளுக்கு செல்வி பொறுப்பாக இருந்தார். இவர்களது நிலையிலிருந்து இருபத்தைந்து மீற்றர் தூரத்திலேயே இராணுவத்தின் நிலைகளும் அமைந்திருந்தன. தினசரி சண்டையைச் சந்திக்க வேண்டிய மிகவும் நெருக்கமான சூழல். அப்போது எதிரியின் முன்னேற்ற முயற்சி ஒன்றை மிகவும் திறமையாக முறியடித்தனர். அந்தச் சண்டையைப்பற்றி முடித்துவிட்டுத்தான் எனக்கு அறிவித்தனர். அதில் ஒரு PKLMG யையும், ஆறு தானியங்கித் துப்பாக்கிகளையும் கைப்பற்றியதுடன் இரண்டு இராணுவ சடலங்களையும் கைப்பற்றியிருந்தார்கள். உண்மையில் அது ஒரு திறமையான சண்டை.

மொத்தத்தில் செல்வி ஒரு தனித்துவமான போராளி. நான் பல தடவைகள் செல்வியின் திறமைகளை பாராட்டியிருக்கிறேன். அவரது சிறப்பான திறமைகளைக் கருத்தில் எடுத்தே ஓயாத அலைகள் 2 சமருக்கு அவரது அணி உள் நுழைந்து மறிப்புத் தாக்குதல் நடத்தும் அணியாக தெரிவு செய்யப்பட்டது. ஜெயசுக்குறுய் எதிர்ச்சமர் முழுவதுமாக நின்று பாடுபட்ட அவர் ஜெயசுக்குறுயின் தோல்விச் செய்தியைக் கேட்பதற்கு உயிருடன் இல்லை. செல்வி இருந்திருந்தால் அவரது அனுபவங்கள் இன்னும் பல போராளிகளை வளர்த்திருக்கும். அவரும் வளர்ந்திருப்பார் என பெருமையோடும், வேதனையோடும் கூறினார் தளபதி கேணல் கருணா அவர்கள்.

ஓயாத அலைகள் 2 சமரில் செல்வியின் செயற்பாடுகள் பற்றி தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் குறிப்பிடும் பொழுது செல்வியின் சண்டைக்கள செயற்பாடுகளை நான் அவதானித்த வரையில் அவர் ஒவ்வொரு போராளிகளுடனும் பழகுவதிலும், இணைந்து செயற்படுவதிலும் கூடுதலான ஈடுபாட்டைக் கொண்டிருந்தவர். ஒரு சாதாரண போராளியாகவும், சிறந்த பொறுப்பாளராகவும் செயற்படும் தன்மையையும் கொண்டிருந்தார். அத்துடன் தனக்குக் கீழிருந்த போராளிகளுக்கு உறுதியானதும், உண்மையானதும், நம்பகத்தன்மையுமான சரியான கட்டளைகளை வழங்கக் கூடியவராகவும் இருந்தார்.

ஓயாத அலைகள் 2 சமருக்கு உள் நுழையும் அணிகளில் ஒன்றாக செல்வியின் அணியும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. கிளிநொச்சியிலிருந்து பார்க்கும் போது பிரதான வீதிக்கு இடப்பக்கமாக செல்வியின் அணியும், வலப்பக்கமாக சோதியா படையணியின் குணாளினியின் அணியும் உள் நுழைந்து கிளிநொச்சித் தளத்தைப் பார்த்தபடி தமது நிலைகளை அமைக்கவேண்டும். அதில் செல்விக்கு அணிகளைத் தொடர்பு படுத்தும் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. சமருக்குரிய பயிற்சிக் காலத்தில் தனது அணியை திறமையாக வழிநடத்தினார். சில குறித்த பயிற்சிகளில் எல்லாம் நேரம் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட்டது. குறித்த நேரத்தில் வேகமாக, சரியாக அப்பயிற்சி செய்து காண்பிக்கப்பட்டது. சண்டை ஆரம்பிக்கப்போகும் இறுதி நேரத்திலும் செல்வி தயங்கித் தயங்கித் தனது அணியை சரிபார்த்தபடி [illegible] தாவிக்கக் கூடியதாக இருந்தது.

சண்டை தொடங்கியபடின் செல்வியின் அணி தனது இலக்கை நோக்கி நகர ஆரம்பித்தது. [illegible] நகர்ந்த அணி பரந்தன் (சிறீலங்கா படையினரின் தலைமை) பணிமனைக்குள் (Headquarters) நுழைந்து விட்டது. உடனடியாக சரியான முடிவெடுத்து அணியை பின்னுக்கு எடுத்து பக்கவாட்டாக நகர்த்தி பிரதான வீதிக்குக்குறுக்காக தமது இலக்கை அடைந்தார்கள். அந்த நேரத்தில் தனது அணிகளைக் குழப்பவிடாமல் அதே நேரத்தில் எதிரிக்கும் தெரிந்து விடாமல் அணிகளை நகர்த்திய பழமால் தான் பெரிய இழப்புக்களைத் தவிர்க்கக் கூடியதாகவும் வெற்றியைப் பெறக்கூடியதாகவும் இருந்தது. இந்த இடத்தில் செல்வியின் திறமை நிச்சயம் பாராட்டப்பட வேண்டியது.

சண்டை நடந்து கொண்டிருக்கும் பொழுதே உடனுக்குடன் நிலைமைகளை அறிவித்துக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது அவர்களுக்கு நூறு மீற்றர் தூரத்தில் இருந்த காடிப்போக்கு மினிமுகாமிலிருந்து சினைப்பர் சூடுகளும், மோட்டார் எறிகணைகளும் வந்து வெடித்துக் கொண்டிருந்தன. அத்துடன் சரியான காப்பு மறைப்பு இல்லாத நிலையில், தலையை உயர்த்த முடியாத சூழலில் மண்ணோடு மண்ணாகப் படுத்திருந்தபடியே காப்பரண் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். போராளிகளின் உயிர்களைப் பாதுகாக்கவேண்டும், இழப்புக்களைத் தவிர்க்கவேண்டும் என்பதில் செல்வி அதிக அக்கறையாக இருந்தார். அத்துடன் காயப்பட்டவர்களையும், வீரச்சாவடைந்தவர்களின் உடல்களையும் உடனுக்குடன் அனுப்பிவைத்துக் கொண்டிருந்தார். முதலாவது நாள் தகர்ந்த படைகளுடன் செல்வியின் அணியினர் சண்டைசெய்து முப்பதிற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்று ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தனர். இரண்டாவது நாளாகவும் அதே நிலை நீடித்துக்கொண்டிருந்தது. அப்போதும் நிலைமைகளை அறிவித்துக் கொண்டிருந்த செல்வி "நாங்கள் உறுதியாக இருக்கிறோம். கடைசிவரை விடமாட்டோம்" என்றே கூறினார். எப்பொழுதுமே அவரது அறிவிப்புக்கள் உறுதியானவையாகவும் உற்சாகமானவையாகவுமே அமைந்திருந்தன இந்த நிலையைத்தான் தனது அணியினருக்கிடையேயும் பேணி வார். அவர்களின் மனநிலையில் ஒரு சின்னத் தளர்வுகூட இருக்கவில்லை.

இராணுவம் தப்பியோடத் தயாரான போது உடனுக்குடன் நிலைமைகளை அறிவித்தபடி தாமும் எதிர்த்தாக்குதலுக்குத் தயாராக நிற்பதாக அறிவித்தார். "இதோ நூற்றி ஐம்பது மீற்றரில் வந்து விட்டான் ..... இதோ நூறு மீற்றரில் வந்து விட்டான் .....ஓடுறபடி மாதிரி வருகிறான் .....நாங்கள் அடிக்கிறோம்" என கணத்துக்குக் கணம் நிலைமைகளை அறிவித்தபடியே சண்டை செய்து கொண்டிருந்தார். அந்த இறுதி நேரத்தில் செல்வியிடம் இருந்து அறிவிப்பு வந்து கொண்டிருந்தது "எங்களைப் பார்க்கவேண்டாம். செல் அடியுங்கள். அவன் ஓடுறான். விடக்கூடாது செல் அடியுங்கள்" எனக் கூறிக்கொண்டிருந்தார். உண்மையில் அந்தப் பிள்ளையின் வீரத்தையும், அர்ப்பணிப்பையும் என்னால் மறக்கவே முடியாது என உணர்வு பூர்வமாக தளபதி கேணல் பால்ராஜ் கூறினார்.

லெப்.கேணல் செல்வி தனது நீண்ட கால வரலாற்றில் பல தடவைகள் விழுப்புண் ஏற்றுக் கொண்டவள், மாலதி படையணியின் வரலாற்றில் தனக்கென ஒரு அத்தியாயத்தை உருவாக்கிக் கொண்டாள். இவளின் செயல் வீரம் இன்று அவள் வளர்த்த பிள்ளைகளிடம் மின்னுகின்றது. அந்தத் துடிக்கான பேச்சும், துடிப்பான செயல்களும், ஆழமான அவள் விழிகளின் கம்பீரமும் எவராலுமே இலகுவில் மறந்து விட முடியாதவை. போரில் ஒரு வீரன் வீரச்சாவடையும் பொழுது அவனது தலைவனும், தளபதிகளும் வேதனை அடைந்து கண்ணீர் விட்டால் அவனே தலை சிறந்த மாவீரன் என்கிறது திருக்குறள்.

"புறந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு

இரந்துகோள் தக்கது உடைத்து"

லெப்.கேணல் செல்வி அதுபோலவே தன்னை வளர்த்த தளபதிகள் விழிகசிய, தான் வளர்த்த பிள்ளைகளின் மனமுருக, களமுனைக் காலத்தில் புதிய புறநானூற்று ஒரு வீர மகளாய் தன் வீரத்தைச் சிறந்தகளை அகல விரித்துக் கொண்டாள்.

---


# சிங்களத்தின் இன வெறியை

[illegible]

**83 இனப்படுகொலை நாட்களின் பதிவு - 1**

- [illegible]

சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா, 11.07.1983 (Daily Telegraph)



[illegible]

## இனப்படுகொலை - வரலாற்றுப் பின்னணி

[illegible]

**83 இனப்படுகொலை நாட்களின் பதிவு - 3**

- [illegible]



[illegible]

# உலகிற்கு வெளிக்காட்டிய "83 ஜூலை"

### 83 இனப்படுகொலை நாட்களின் பதிவு-4

★ வாகனத்தில் வந்தவர்கள் வாகனங்களிலிருந்து இழுத்தெறியப் பட்டனர். தடிகளினால் தாக்கப்பட்டனர். கற்களினால் தாக்கப்பட் டனர்... . பிறர் கத்தியினாலும் கோடரியினாலும் வெட்டப்பட்டனர். சிங்கள இளைஞர்கள் வீதிகளினை சூறையாடினர். வீடுகள், பணிமனைகள், வணிக நிலையங்கள் சூறையாடப்பட்டன,..



★ சனாதிபதி ஜெயவர்த்தனாவின் வீட்டிற்கு 100 மீற்றர்கள் தொலைவில் கொழும்பு கண் வைத்தியசாலைக்கு அருகாமையில் ஒரு தமிழ் துவிச்சக்கர வண்டி ஓட்டுனரை தாக்கிய குண்டர்கள் அவரை வண்டியிலிருந்து இழுத்தெடுத்து பெற்றோல் ஊற்றி எரித்தனர். அவர் கத்திக் கொண்டு ஓடும்போது திரும்பப் பிடித்து காட்டுக் கத்தியினால் வெட்டினர்.

*(London Telegraphy 26.07.83)*




1983 ஜூலை 23 அன்று யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் இராணுவம் கண்மூடித்தனமாக சுட்டதில் 30 தமிழர்கள் கொல்லப்பட்டனர். மூன்று தமிழ்ப் பெண்களை இராணுவம் பாலியல் பலாத்காரம் செய்தது. இதில் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டார். இராணுவத்தின் இக்கொடிய செயலுக்காக, இராணுவத்தினர் இராணுவ வண்டியில் வந்துகொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் திடீரென்று அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஜூலை 24 அன்று இதற்கு முன் நடந்திராத அளவில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு முன்தினம் இராணுவத்தினர் தாக்கப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இக்கலவரங்கள் நடத்தப்பட்டன. பல நாட்கள் நடந்தன. குறிப்பாக, கொழும்பு நகரில் பெருமளவு நடந்தன. கண்ணெதிரே பட்ட தமிழர்களெல்லாம் கடுமையாகத் தாக்கப்பட்டனர். உயிருடன் எரித்துக் கொல்லப் பட்டனர். கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். வீடுகளும், கடைகளும், வணிக நிறுவனங்களும் கொள்ளையடிக்கப்பட்டன, எரிக்கப்பட்டன. வெளியாட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள வெறிக்கும்பல்கள் இக்கொடுஞ் செயல்களைச் செய்தன. இத்தாக்குதல்கள் நடந்த போது பாதுகாப்புப் படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அல்லது அவர்களுடன் தாக்குதலில் ஈடுபட்டனர். இத் தாக்குதல் முன்பே திட்டமிடப்பட்டு தமிழர்களின் உயிரையும், உடமைகளையும் குறிவைத்து நடத்தப்பட்டன. வாக்காளர் பட்டியலையும், வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள் பட்டியலையும் கையில் வைத்துக் கொண்டு அவற்றைச் சரிபார்த்து தமிழர்களின் வீடுகள், கடைகளை அடையாளம் கண்டு சிங்கள வெறிக் கும்பல் தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதல்களை நடத்துவதற்காக சதித் திட்டம் தீட்டியதிலும், இவற்றைச் செயல்படுத்தியதிலும் அரசாங்க அதிகாரிகளும் பங்குபெற்றிருந்தனர் என்பது பரவலாக நம்பப்படுகிறது. அம்னஸ்டி இன்ரர் நேஷனல், சர்வதேச சட்ட வல்லுநர் ஆணையம் (International Commission of Jurists), சிறீலங்காவில் இயங்கிய குடியுரிமை அமைப்புக்கள் ஆகிய பலமுறை அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் இத்தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்ய சுதந்திரமான எந்தவொரு ஏற்பாட்டையும் அது செய்யவில்லை. குற்றச்சாட்டுக்களின்படி குற்றவாளிகள் யாரும் தண்டிக்கப்படவும் இல்லை.



ஜூலை 25 அன்று கடுமையான பாதுகாப்புகள் கொண்டதாகக் கருதப்படும் வெலிக்கடை சிறையில் அரசியல் கைதிகளாக இருந்த 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர். கைதிகளாக இருந்த சிங்களர்கள் குண்டாந்தடி, இரும்பு தடிகள் போன்றவற்றால் தமிழ்க் கைதிகளைத் தாக்கினார்கள். சிங்களச் சிறைக் காவலர்கள் சிங்களக் கைதிகளின் அறைகளைத் திறந்து விட்டு தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்த ஏற்பாடாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

ஜூலை 27 அன்று, வெலிக்கடை சிறையில் ஜூலை 25 அன்று நடந்தது போலவே அரசியல் கைதிகளாக இருந்த 18 தமிழர்கள் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இப் படுகொலைகள் நடந்தபின் குற்றவியல் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டது. மனிதப் படுகொலைகள் நடத்தப்பட்டன என்பது உண்மையே என்று இந்த விசாரணையில் கூறப்பட்டது. ஆனால், இப் படுகொலைகளைச் செய்தவர் யார் என்று ஒருவரையும் அடையாளம் காட்டவில்லை. காவல்துறையினரின் அரைகுறையான விசாரணைக்குப் பின் எவர் மீதும் குற்றம் சாட்டப்படாமலேயே இந்த விசாரணை முடிக்கப்பட்டு விட்டது. சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வெலிக்கடை சிறைப் படுகொலைகள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என்று முன்வைத்த கோரிக்கைகளை சிறீலங்கா அரசாங்கம் ஏற்கவில்லை. கடுமையான பாதுகாப்பு உடைய வெலிக்கடைச் சிறையில் அரசாங்க அதிகாரிகளின் தூண்டுதலும் துணையும் இல்லாமல் இப்படுகொலைகள் நடந்திருக்க முடியாது என்பது வெளிப்படை.

'[illegible]' என்னும் ஜேர்மனியச் [illegible] சிறீலங்காவின் இனப்படுகொலை பற்றிய தனது விரிவான ஆய்வில் குறிப்பிட்டவை

### 83 இனப்படுகொலை நாட்களின் பதிவு 5

★ சிறீலங்கா அரசு படுகொலைகளில், வன்முறைகளில், அழிவுகளில் ஈடுபட்டவர்களை நிச்சயம் நீதியின் முன் நிறுத்தும்.

*(ஐ.நா முன் சிறீலங்கா 1983)*

★ உண்மையைக் கண்டறிவதற்கான பாரபட்சமற்ற, நீதியான உத்தியோகபூர்வ பகிரங்க விசாரணைகள் எதுவும் நடாத்தப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படாமை எனக்கு வித்தியாசமானதாகப்பட்டது.

*(சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு 1984)*

★ பிரித்தானியா போர்க்காலத்தில் ஆணைக்குழுவை (விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவை) நியமித்ததா?

*(ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 83 விசாரணைகள் தொடர்பாக இந்திய நிருபர் குல்தீப் நாயருக்கு அளித்த பதில் 17.02.1985)*

# தியாக தீபங்கள்




லெப். சீலன்


லெப். செல்லக்கிளி


வீரவேங்கை ஆனந்


நாமு கந்தையா


சந்திரசேகரன்


சிவானந்தராசா

## விழிகளில் சுதந்திரக்கனல் மூட்டிய தியாக சீலர்கள்

சீலன் திருமலையின் வீர மண்ணிலே விளைந்த நன் முத்து. சிங்கள இனவெறியாட்சியாளர்களின் நேரடியான ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு கிடந்த திருக்கோணமலையின் நடைமுறை அனுபவங்களை அவன் கண்கூடாகக் கண்டவன். சிறீலங்காவின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கடற்படை, விமானப்படையின் அடக்குமுறைகளும் சிங்களக் காடையர்கள், இராணுவம், போலீஸ் ஆகியோரின் அரவணைப்புடன் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் கொடுமைகளும் திருமலையில் ஏராளம். இந்த ஆக்கிரமிப்பிற்கு இடங்கொடுத்து வந்ததால்தான் திருமலை மண்ணையே சிங்களவர்களுக்குப் பறிகொடுக்கும் நிலை வந்தது என்று சீலன் கொதிப்பான். கல்லூரி நாட்களிலேயே இனவெறி பிடித்த சிங்கள ஆளும்வர்க்கத்திற்கெதிரான போராட்ட உணர்வு கொண்டவனாகச் சீலன் திகழ்ந்தான். 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்ட சிறீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வைபவத்தினைத் தமிழீழ மண்ணில் அமர்க்களமாகக் கொண்டாட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அம்பலப்படுத்த பாடசாலை மாணவனாக சீலன் முன்வந்தான். இந்த வைபவத்தினையொட்டித் திருமலை இந்துக் கல்லூரியில் சிறீலங்காவின் தேசியக் கொடியை ஏற்றிவைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சீலன் தனக்கேயுரித்தான நுட்பமான அறிவைப் பயன்படுத்தி பொஸ்பரஸ் என்னும் இரசாயனத்தை அத்தேசியக் கொடிச்சுருளில் மறைத்து வைத்தான். தேசிக் கொடி ஏற்றப்பட்ட போது அது எரிந்து சாம்பலாகியது. சந்தேகத்தின் பேரில் 18 வயது மாணவனான சீலன் கைது செய்யப்பட்டு சிங்களக் கூலிப்படையால் சித்திரவதை செய்யப்பட்டான். அந்த வயதிலும் தனக்கு உடைந்தையாக இருந்த எவரையும் அவன் காட்டிக்கொடுக்கவில்லை. கொள்கையிலே உறுதி கொண்டவர்களைச் சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் என்ன செய்துவிட முடியும்? தனி மனித ரீதியிலான எதிர்ப்புணர்வால் அரச இயந்திரத்தை அழித்துவிட முடியாது என்ற அனுபவத்தையும் இவை சீலனுக்குப் போதித்தன. இந்த அனுபவமே சீலன் தன்னை ஒரு புரட்சிகர இயக்கத்தில் இணைத்துக் கொள்ள உந்து சக்தியாக உதவியது.

ஆயுதந்தாங்கிய அடக்குமுறையை ஆயுதப் போராட்டத்தின் மூலமே தகர்க்க முடியும் என்ற நம்பிக்கையே சீலனைத் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திலே இணைத்தது.

இறுதிவரை, ஆயுதப்போராட்டம் மூலம் தமிழீழம் என்ற ராஜபாட்டையில் சீலன் கம்பீரமாகவே நடந்திருக்கிறான்.

இயக்கத்தில் சேர்வதற்கு முன் விட்டெறிந்து சேர்ந்த [illegible] வாழ்க்கையோ, கை நிறைய [illegible] கிடைக்கும் தொழிலோ சீலனுக்கு இல்லை. இவனையே நம்பி அன்றாடம் சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு வறிய குடும்பம் இருந்தது. வளமான வாழ்க்கையை அல்ல வறிய குடும்பமொன்றின் எதிர்பார்ப்புகளை நிர்த்தாட்சண்யமாகத் தூக்கி வீசிவிட்டுவரும் பெரும் மனத்திடமும் இலட்சியப் பிடிப்பும் சீலனிடம் இருந்தன.

சாக்கு படங்குகளால் மறைக்கப்பட்ட சிறிய குச்சுவீடு. வேலையோ, நிரந்தர வருமானமோ இல்லாத தந்தை, வீடுகளில் சமையல்வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றும் தாய், இரண்டு அண்ணன்மார், இரண்டு அக்காமார், ஒரு தங்கை. சீலன் உணவில்லாமலே வாடிய நாட்கள் ஏராளம். சிந்திக்கும் திறன் கொண்ட சீலன் தனது குடும்பம் மட்டுமல்ல, எத்தனையோ குடும்பங்கள் ஏழ்மை நிலையில் வாடுவதைக் கண்டு நொந்திருக்கிறான்.

சீலனின் வாழ்நிலை புரட்சிகரச் சிந்தனைகளின் விளைநிலமானது. மார்க்சியச் சிந்தனையில் அவன் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டான். மார்க்சிய ஒளியில் தேசிய இனப் பிரச்சனையை அவன் தெளிவாக விளங்கிகொண்டிருந்தான்.

### செல்லக்கிளி அம்மான்

ஓய்வு நேரங்களில் காட்டுப்பகுதிகளில் கட்டுத் துவக்குக்கட்டி மிருகங்களை வேட்டையாடுவது அவனது பொழுது போக்காகும். ஆரம்ப காலங்களில் காடுகளில் இயக்கத்துக்கான முகாம்களை அமைக்கும் வேலை நடைபெறும் போதெல்லாம் முகாம்களுக்குத் தேவையான அமைப்புக்களைக் கொண்ட மரங்களைத் தேடிக் கண்டு பிடித்து வெட்டுவது, கொட்டில் போடுவது, கூரை வேய்வது போன்ற செயல்கள் அவன் தலைமையில் அவன் மேற்பார்வையில் தான் நடைபெறுவது வழக்கம். எந்த வாகனத்தையும் மிகத் திறமையாக ஓட்டும் பயிற்சியைப் பெற்றிருந்த செல்லக்கிளி, தனது வாழ்க்கையை, தான் வாழ்ந்த சூழ்நிலையை ஒரு கெரில்லாப் பயிற்சிக்களமாக ஆக்கிகொண்டிருந்தான். ஒரு தடவை உடையார்கட்டு குடியேற்றத் திட்டத்தில் காட்டு மரங்களை வெட்டி விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் எதிர் பாராமல் வந்த இரண்டு பெரிய கரடிகளில் ஒன்றை கோடரியால் வெட்டிக் கொன்றான். மற்றக் கரடி கூட இருந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது. ஆபத்து வரும் வேளைகளில் நிதானமாகச் சிந்தித்து வேகமாகச் செயற்படும் தன்மை செல்லக்கிளிக்கு கூடவே பிறந்ததாகும்.

7.8.78 அன்று அதிகாலை 3.30 மணியளவில் முருங்கன் மடு வீதியின் கட்டுறுமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த பாழுந்திரியைத் தோட்டத்துக்குள் இருந்த விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப்படை. போலீஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர் நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப்புலி இளைஞர்களைச் சுற்றிவளைத்தனர். இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வேட்டைத் துப்பாக்கிகள் சகிதம் வந்திருந்த போலீசாருடன் பேச்சுக் கொடுத்து தன் புத்தி சாதுரியத்தால் அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பினான் செல்லக்கிளி. போலீசார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாகப் பாய்கிறார்கள். போலீசாரின் மேல் அடித்தனர், போலீசாரிடமிருந்த சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் கைகளுக்கு மாறுகின்றன.

தொடர்ச்சி 15ம் பக்கம்



[illegible]



தமிழீழத்தின் போராட்ட வரலாற்றில் முதன்மை வாய்ந்த கெரில்லா வீரன் சீலன். படைத் தலைவன் என்பவன் ஆணை பிறப்பிப்பவன் மட்டுமல்ல தானே முன்னுதாரணமாகத் திகழ்ந்து போரை வழி நடத்துபவன் என்பதற்கு சீலனே இலக்கணம். ஒரு கெரில்லாத் தாக்குதலை மேற்கொள்ளு முன் அதற்கான தகவல்களைத்திரட்டுவதிலும் அதன் செயற்பாடு, விளைவு, தாக்கம் என்பவற்றை ஆராய்வதிலும் அவன் கடுமையாக உழைத்தவன். களைப்பின்றி எந்த விதமான தீங்கும் ஏற்பட்டு விடாது பார்த்துக் கொள்வதில் அவன் மிகவும் விழிப்புடன் இருப்பான். அசாத்தியமான துணிச்சலும், எதிரிகளின் பலவீனங்களை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுக்கும் நுண்ணறிவு அறிவுமே குறுகிய காலத்தில் இராணுவப் பிரிவின் தலைவனாக அவனைப் பதவி வகிக்கும் நிலைக்கு உயர்த்தியது. ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது எந்திரத்துப்பாக்கியில் இல்லை, அவனது மனதில்தான் இருக்கிறது என்பது சீலனின் அனுபவ வாசகம். அவனது மனவலிமை அபாரமானது. சாவுக்கு அவன் வாழ்க்கை ஒரு சவால்.



# பொய்மைக் குதிரையில் ஐந்தாண்டு பயணம் !

## அதிசயம் ஆனால் உண்மை !!!

சந்திரிகா அரசு, அடுத்தகட்டத் தேர்தலுக்கு ஆயத்தமாகிவருகின்றது. சனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் என, அடுத்தடுத்து நடக்கவிருக்கும் தேர்தலுக்கான திகதிகள் தெரிவுசெய்யப்படவில்லை என்றபோதும், இந்த ஆண்டுக்குள் சனாதிபதித் தேர்தலை நடாத்த சந்திரிகா அரசு திட்டமிடுவதாகவே அறியப்படுகின்றது. சனாதிபதித் தேர்தலை முன்னரே நடாத்தினால், பாராளுமன்றத் தேர்தலின் வெற்றிவாய்ப்பிற்கு சாத்தியப்படுவதாக அது கணக்குப் போட்டுள்ளது.

[illegible]



அனைத்து அதிகாரங்களும் நிறைந்த சனாதிபதி ஆட்சி முறைக்கெதிராக பிரச்சாரம் செய்து, அந்த தனிமனித சர்வாதிகார ஆட்சிமுறையை ஆட்சிக்குவந்த ஒருவருடத்தில் நீக்குவேன் என்று முழங்கிய சந்திரிகா, இன்று, சனாதிபதித் தேர்தலையா அல்லது பாராளுமன்றத் தேர்தலையா முன்னர் நடத்துதல் வெற்றிவாய்ப்புக்கு சாதகம் என்று சாத்திரம் பார்க்க ஆரம்பித்திருக்கின்றார்.

[illegible]

சுப்பு

# ஒளியைத் தேடி

நான் சுமந்து கொண்டிருக்கும் இருண்ட வாழ்வைப் பார்த்து எத்தனையோபேர் என் மேல் பரிதாபம் கொண்டுள்ளனர். தங்களுக்காக நான் செய்த கடமை போன்று என்னை வியந்து நோக்கினார்கள். பத்து மாதம் சுமந்து ஒரு குழந்தையை வலியோடு பெற்றெடுத்து மகிழ்வுறும் அன்னை போன்று இந்த வாழ்வை சுகமான சுமையாக எண்ணி நான் எனக்குள் மகிழ்வுறுவேன்.

என் உலகம் இருண்டதுதான். ஆனாலும் நான் இருண்டுபோன உலகத்தில் வாழ்வதாய் உணரவில்லை. எனது தாய் நாட்டின் ஒவ்வொருவரும் ஒளி தருபவர்களாகவே எனக்குப் படுகின்றது. இதைவிட வேறு என்ன எனக்கு வேண்டும்.!

என் மக்களின் பாசக்கரங்களைத் தாண்டி, தானே ஒளியாகி சிந்துஜா நிற்கிறாளே - - !

ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கொள்வதால் இரு துருவங்களின் அருமையை அறியமுடிகின்றது என்பார்கள். சிந்துஜா என்கின்ற ஒளி எனது இருண்டுபோன கண்களுடன் முரண்பட்டுக்கொள்வதால்தானே நானும் எனது உறுதியின் எல்லை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

சிந்துஜா என்கின்ற அந்த அசாதாரண பெண்ணின் முகத்தை நான் கண்டதில்லை. சிம்பனி இசை போன்ற அவளின் குரல் மட்டுமே என் செவியைக் குடையும் குரலைப் போலவே அவளும் அழகானவளா, நெட்டையா, குள்ளமா எதையுமே என்னால் உறுதியாகக் கூறமுடியாதுதான்.

அவளின் குரல் வரும் திசையை வைத்து அவள் என்னைவிட சற்று உயரம் குறைந்தவள் என்பதை தீர்மானித்து வைத்துள்ளேன்.

இந்தக் குரலைக் கேட்டுக் கொண்டிருப்பதற்காகவே நான் கண்களை இழந்து விட்டிருக்கலாம்.

* இப்படிக்கூட நான் மனதை அலையபாய விட்டிருக்கிறேன்.

வாழ்வெல்லாம் உதறித்தள்ளியபின் கண்களையும் தொலைத்து 'அந்த ஒரு நாளுக்காக' தவம் கிடக்கும் என் மனதிலேயே அவளின் குரல் தடுமாற்றம் தருகின்றது என்றால், நான் நினைத்து வைத்திருக்கும் சிந்துஜா என்ற பௌர்ணமி கண்டு எத்தனை பேர் தங்களின் அன்பையெல்லாம் சொரிந்த சிந்தனையிருந்திருப்பினும்.

என்னோடு சில மனித்துளிகள் மட்டுமே இருக்கிற சிந்துஜா என்ற தீபத்தை பற்றி நான் இப்படியெல்லாமும் சிந்தித்து இருக்கிறேன். சிந்துஜாவின் இனிய குரலுக்கும், அழகிய முகத்திற்கும் பின்னால் இருண்டுபோன வாழ்வின் கதை இருக்குமோ? அப்படித்தான் ஏதும் நிகழ்ந்திருக்கவேண்டும். இல்லையென்றால் இந்த வயதில் இப்படியாரு முடிவுக்குவர இவளால் எப்படி முடியும்.

கேள்வியையும், பதிலையும் நானே கூறி எத்தனையோ தடவை சிந்தித்தும் இருக்கிறன் ஏனோ அவளிடம் கேட்டு என் எண்ணங்களை பூர்த்தியாக்க விரும்பவில்லை.

எனது வாழ்வில் நான் அறியத் தொடங்கிய பருவத்து நிலைகள் தொடக்கம் இன்றைய முடிவு வரையும் எல்லாவற்றையுமே அவளிடம் சொல்லியிருக்கிறேன். என் இளமைக்கால திருவிளையாடல்கள் பற்றி அவளிடம் கூறுவதற்கு கணக்கே கிடையாது.

எல்லாவற்றையும் நகைத்தபடி கேட்பாள். ஒருமுறைகூட அவளைப்பற்றி கேட்க என் மனம் முண்டியடிக்கவும் இல்லை. அவளாக முன்வந்து தன்னைப் பற்றி எதுவும் கூற முனையவுமில்லை.

சிந்துஜாவின் இளம் பிராயம் முழுவதும் இருட்டாய் இருந்திருக்கவேண்டும். அவை எல்லாவற்றையும் கூறி என்னை ஏன் கலங்கடிக்கவேண்டுமென நினைத்தும் இருப்பாள்.

இப்போது மட்டுமில்லை வீட்டிலகூட அவள் கட்டுப்பெண்ணாய் இருந்திருப்பாள் போலும்! என்னுடன் அவள் உரையாடும் சமயங்களில் அதை நான் உறுதி செய்திருக்கிறன்.

தங்கள் படைப்புக்களில் பெண்களை உயர்வாய் மதித்துவிட்டு நடைமுறையில் பச்சோந்தி விளையாட்டுச் செய்யும் ஆண்களையும், பெண்ணடிமைத்தனம் பற்றி பேசிக் கொண்டு அதிலிருந்து மீள சிறிதும் முயற்சிக்காத பெண்களையும் அவள் நிரம்பவே சாடுவாள்.

எனக்கும் அவளின் வாதங்களில் பிழையேதும் இருப்பதாக தோன்றுவதில்லை.

எப்படியும் அவளின் வாழ்வின் பின்னணியை தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற துடிப்பு என்னுள் வேகமெடுத்துக் கொண்டிருந்தது.

நானை எப்படியேனும் அவளின் பூர்வீகம் பற்றி கேட்டுவிடுவது என முடிவாய் இருந்தேன். சே - - ! இவ்வளவு நாளும் தன்னைப் பற்றி ஏதும் கேட்கவில்லை என அவள் ஏதும் நினைத்திருப்பாளோ?

மனச்சஞ்சலம் அடைந்தவனாய் அன்றைய இரவை - எனக்கு ஏது இரவு, பகல் என்றும் நினை என நினைப்பவர்கள் இதுவரையும் என்னை புரிந்து கொள்ளவில்லை என்றே என்னால் கூறமுடியும் - கழிக்க ஆயத்தமானேன்.

இரவிலோ, பகலிலோ பயிற்சி இல்லையெனில் எனக்கு ரேடியோவே தஞ்சம். நண்பர்களுடன் கும்மாளமிட்டாலும் அதிக நேரங்களில் ரேடியோவை திருகியபடிதான் இருப்பேன். செய்திகள் கேட்காமல் இருப்பது என்பதை நினைக்கவே ஆத்திரம் சீறிட்டுக் கொண்டு வரும். எல்லாவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு சிறுவயதிலேயே ஊறியதுதான்.

பயிற்சியில் இருக்கும்போது கூட ரேடியோ போட்டின் அணியத்தில் இருக்கும். பயிற்சியின்போது என்னால் செய்திகளை உள்வாங்காமல் போனாலும் ரேடியோவில் செய்தி போய்க்கொண்டே இருக்க வேணும்.

சிறிய வயதில் ஊறிய இப்பழக்கத்தை விட்டுத்தள்ள நான் விரும்புவதில்லை. எனது பொறுப்பாளரும் இதனை ஆட்சேபிக்கவில்லை. பயிற்சிகளின்போது எனக்கு சிந்துஜா தான் கண்கள். ஆசிரியர் மட்டுமன்றி அவ்வேளைகளில் எனக்கு பாதுகாவலாளியும் அவள்தான்.

எதையும் உடனடியாக கிரகித்துக் கொள்ளும் தன்மை என்னிடம் இருந்தாலும் சிந்துஜாவின் தனிப்பட்ட திறமைகள் மூலமாகவே சில கடினமான பயிற்சிகள் எனக்கு இலகுவாக மாறுகின்றது. கடினமான பயிற்சிகளை எனக்கு விளங்கவைப்பதில் அவள் தனிரகம்.

எனது பொறுப்பாளர்கூட பகலிலோ, இரவிலோ பயிற்சி தருவதற்கு மிகவும் சிரமப்படுவார். எனக்குத் தனியே சொல்லித் தருவதில் அவருக்கு அதும் நட்டமாக இருக்கமுடியாது.

சிந்துஜாவை என்னுடன் ஒரே படகில் பயிற்சிக்கு இணைத்த பின்னர் அவருக்கு [illegible] இருக்கிறது போலிருக்கும்.

## -சிந்துஜா விந்தியவள் -

[illegible] அவருக்கும் சிந்துஜா மேல் அதீத நம்பிக்கை.

இரவிலே பயிற்சிகளின்போது எனக்குச் சில விடயங்களை விளக்குவதில் சிந்துஜா வல்லவள், எனது பொறுப்பாளருக்கும் பொறுப்பை [illegible] வைத்திருப்பார்கள் என்றே நினைக்கின்றேன்.

இரவில் பயிற்சி நேரத்தில் படகை நான் செலுத்திக் கொண்டிருக்கையில் சிந்துஜா சிலசமயம் மௌனமாகி விடுவாள். கரை திரும்பியதும் உடனே கேட்பாள்.

அண்ணை - - - ! இரவிலை உங்களுக்கு கண் தெரியிறதோ?

அவள் கேள்வியின் அர்த்தம் என்னை பாராட்டுவதாய் அமையும்.

ஏன் சிந்துஜா - - -! பகலிலை எனக்கு கண் தெரியாது என்று யார் சொன்னது.

என் பதில் அவளை திருப்தி செய்திருக்க வேண்டும். சிரித்தபடியே தனது முகாமுக்கு நடந்து செல்வாள்.

எனது முகாமின் பாதையை அறிந்து கொண்டே நானும் நடையைக் கட்டுவேன்.

என்னை பயிற்சியில் நிபுணத்துவம் மிக்கவனாக்கியவளே எங்கள் ஆசையை நிறைவேற்ற சந்தர்ப்பம் தரப்படும் என்று கடைக் குரலைக் கேட்டால் தமிழீழ இசைக் குழுவிலை ஒரு இடம் தருவினம்.' அவள் குரலின் இனிமையை பறைசாற்றினேன்.

'முதலிலை இப்போதைய ஆசையை நிறைவேற்றிவிட்டு பிறகு பாடுவதைப் பற்றி யோசிப்பம் அண்ணை.' அப்பேச்சிற்கே முற்றுப்புள்ளியாய் அவள் பதில் வந்தது.

'சிந்துஜா --- வேட்டுக்கு போவோமோ?'

நான் பயிற்சியில் கண்ணாயிருந்தது அவளை நிலையில் ஆழ்த்தியிருக்க வேணும் அவளின் மௌனமும் அதற்கு சாட்சி சொல்வது போலிருந்தது.

'மற்றவைகளும் வாட்டும் அண்ணை'



மொழிபெயர்ப்பாளர் சிந்துஜாவிடம் கண்டுபிடித்து கூறிவிட்டாள்.

தனது கனவை மட்டுமன்றி எனது கனவையும் நனவாக்கவேண்டிய நிலையில் அவள் இருந்தாள். அச்சந்தர்ப்பம் மிக விரைவில் வந்து சேர வேண்டுமென்கிற அவசரம் சிந்துஜாவின் பயிற்சியில் தெறிக்கும்.

கடலில் செல்லும் படகிற்கு துடுப்பும், வழிகாட்டியும் முக்கியம் கடலில் படகிற்கு அவை இரண்டுமே இரண்டு கண்கள் போன்று.

எங்களின் நீண்டநாள் ஆசையை செயற்படுத்துவதற்கும் சிந்துஜாவும் நானும் இரு கண்கள். படகைச் செலுத்துவது நானாக இருந்தாலும், வழிகாட்டும்போது மிகுதி வேலைகள் யாவும் சிந்துஜாவே செய்ய வேண்டும். அவளால் முடியாதது தான் எதுவுமில்லையே! என்னதான் நானும் ஒரு கண் போன்று என கூறிக் கொண்டாலும் எனக்கு இருகண்ணாய் இருப்போடு எங்கள் செயற்பாட்டின் இரு கண்களையும் செயற்படுத்துவது சிந்துஜாதான்.

அன்றைய பயிற்சிக்காக சிந்துஜா வந்து கொண்டிருப்பதை அவளின் குரல் உணர்த்திற்று. தூரத்தில் வருகின்றபோதே அவள் பாடி வரும் பாடல் வரிகள் என் செவியை முட்டி மோதின.

'கருவறையிலே எமை நாங்கள் எழுதிவைத்து செல்வோம் - - - !'

படகின் கோட்டைப் பிடித்தபடி சிந்துஜா பாடியவள் தூரத்தில் வருவதை அறிந்து கொண்டேன். சில வினாடிகளில் படகில் ஏறிய போது சிந்துஜா அருகில் வந்துவிட்டதை அறிவித்துவிட்டேன்.

'சிந்துஜா - - ! நீங்கள் வேறுவிதமாய் இருந்திருந்தால் நல்ல பாடகியாகவும் வந்திருக்கலாம்.' சிரித்தபடியே கூறினேன்.

'சரியண்ணை! இனியேன் நான் பாடகியாக வேணும் சொல்லுங்கோ!' சொல்லி விட்டு கோபமாக நடந்து போய் சிரித்தாள்.

'நக்கலுக்கில்லை சிந்துஜா - - - ! உங்கட நிலையை எனக்கு தெரியப்படுத்தினேன். இந்த சிறிய இடைவெளிக்குள் அவளைப் பற்றி அறிந்துகொள்ள ஆவலானேன். எமது பணியை அமைதியாய் இருந்த அச்சிய தொடர்களை கடலையின் ஆர்ப்பரிப்போடு சேர்ந்து நானும் கலைத்தேன்.

'சிந்துஜா - - - ! உங்கடை வீட்டை வீட்டிலை போனவிருப்பம் இல்லையோ?'

என் கேள்விக்கு அவளின் மௌனம் பதிலானது. 'ஏன் யோசிக்க நிக்கிறியள் வீட்டுக்காரருடன் கோவமோ?' அவளின் நிலையைத் தெரியாமல் எனது சந்தேகத்தையும் கேட்டு வைத்தேன்.

'அப்படி ஒன்றும் இல்லையண்ணை.'

அவளின் பதிலில் கவலை இழையோடியது. 'பிரச்சனையில்லை நான் உங்கடை வீட்டுக்காரரை பார்க்கவேண்டும், நீங்கள் [illegible] சொல்லுங்களேன்?'

உறுதியான முன்னேற்றத்தை நட்டி விட்ட வாறு கூறினேன் 'பார்க்கிறதுக்கும் ஒருத்தரும் இல்லை அண்ணை.'

தனது குரல் பரவுவதாய் கூறிய அவள் இருந்த நிலையை நான் கொஞ்சம் நோக்கினேன். என் முகத்தில் ஆச்சரிய ரேகை ஆட்சி செலுத்திக் கொண்டிருந்ததை. சிறிய இடைவெளியின் பின்னர் சிந்துஜாவே கேட்டாள்.

'என்னண்ணை யோசிக்கிறியள்! தமிழ் ஒருத்தியை நடக்கவைப்பதன் ஒன்று இருக்குதோ? எல்லாம் விதி அதுக்கு விதி விலக்கில்லை அண்ணை.'

அவள் முடிக்கவும், ஏதோ அவளின் முகத்தில் தெரியும் சோகத்தை நோக்கவும் இருப்பது போன்று தலையை தாழ்த்திக் கொண்டேன்.

'நானும் வடமராட்சிதான் அண்ணை, ஒப்பரேசன் லிபரேசன் பிரச்சனையிலை அப்பா போனவதான்! 1987இல் மேல் எண்ணை கடலுக்கும் போனவர். இரண்டு நாளிலை அவரின்ர சிதைந்த உடல் மட்டும் தான் வந்தது. [illegible] அதுக்

தொடர்ச்சி 13ம் பக்கம்

# கணப்பொழுது



லெப். கேணல் மதி

தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் இவன் பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கும். சிறீலங்கா இராணுவத்துடனும்சரி இந்திய இராணுவத்துடனும்சரி இவனது போர்த்திறமைகள் உச்சத்தை தொட்டுநின்றன. இவன் மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். சிறுவயதில் இருந்தே துடிப்பு மிகுந்தவன் பெற்றோரால் பாலச்சந்திரன் என்று பெயர் வைக்கப்பட்டாலும் நண்பர்களாலும் அயலவர்களாலும் பாலா என்று அழைக்கப்பட்டு அதுவே நீடித்த பெயராகவும் இருந்தது. சிறுவயதில் இருந்து இவனது குரல் நீதிக்காகவும் நியாயத்துக் காகவும் ஓங்கி ஒலிக்கும். பல வேளைகளில் அது தொடர்பாக கைகலப்பிலும் இறங்கியது உண்டு. தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் தனது படிப்பை மேற்கொண்டிருந்த வேளை விளையாட்டுத்துறையிலும் மிகப் பெயருடன் திகழ்ந்தான்.

1983 யூலை மாதம் சிங்களப் பாது காப்புப்படையினராலும் சிங்களமக்க ளாலும் சொல்லொணாத துன்பத் திற்கு உள்ளாக்கப்பட்டு இதுவரை தேடிய சொத்துக்களை எல்லாம் பறி கொடுத்து தாய்மண் தேடி ஓடிவந்த தமிழ் மக்களின் துயர்படிந்தநிலை அன்றைய பாலாவை சிந்திக்க வைத் தது. அந்த சிந்திப்பின் முடிவாக விடிவு காண எழுந்து நின்ற விடுதலைப் புலி கள் இயக்கத்தில் தன்னை இணைத் துக்கொண்டான்.

இந்தியாவில் மூன்றாம் பயிற்சி முகாமில் லெப். கேணல் பொன்னம் மானின் வழிகாட்டலில் மிகச்சிறந்த போர்வீரனாக மாறினான். இந்தியப் பயிற்சி முகாமால் வெளிவரும்போது பாலா என்கின்ற பாலச்சந்திரன் மதி என்ற பெயருடன் வெளிவந்தான். லெப். கேணல் விக்ரருடன் இணைந்து மன்னார் பொலிஸ் நிலையத்தாக்கு தலில் பெரும்பங்கு வகித்தான். அதன் பின் மூத்த தளபதி கிட்டண்ணாவால் மல்லாகம், தெல்லிப்பளை பிரதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இந்தப்பிரதேசத்து மக்களுடன் அவர் பழகிய விதம் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடியது.

இவரது திறமையும் நற்பண்புக ளும் அவரை முகாம் பொறுப்பாளராக மாற்ற உதவியது. அந்தக்காலப்பகு தியில் பலாலி முப்படைத்தளத்திலி ருந்து அடிக்கடி இராணுவம் மக்கள் குடியிருப்புக்குள் நுழைவது வழக்கம். எந்த இடத்தில் இராணுவநகர்வு இருந் தாலும் ஒரு சில நிமிடங்களில் அந்த இடத்தில் மதியின் தாக்குதல் குழு வந்து சேரும். கணப்பொழுதிற்குள் திட்டங்கள் தீட்டி வியூகம் அமைத்து இராணுவத்தை எடுக்குப்பிடிக்குள் சிக்கவைத்து பாரிய இழப்புக்களுடன் திரும்பவும் அவர்களை முகாமிற்குள் முடங்கச்செய்து விடுவான்.

இராணுவமுகாமிற்கு வெளியே இராணுவத்தின் வெளியேற்றம் தெரிந் தால் அங்குள்ளவர்கள் சொல்லிக் கொள்வார்கள், 'எல்லாம் கொஞ்ச நேரம் தான் மதியன் வர எல்லாம் சரிவரும்' அவ்வளவு நம்பிக்கை மதி மீது மக்களுக்கு, அந்த நம்பிக்கையை அவன் பொய்யாக்கியது மில்லை. அன் றொருநாள் பலாலி இராணுவ முகாமிலி ருந்து கட்டுவன் சந்தி ஊடாக பெரும் படை யணி ஒன்று புறப் பட்டு தெல்லிப்பளை நோக்கி வந்து கொண் டிருந்தது. வானொ லித் தகவல் மதியின் காதுகளிற்கு எட்டுகி றது சக போராளிக ளைத்தயார் படுத்திக் கொண்டு கைகளில் மிகலாவகமாகத் தொங்கும் M-16உடன் மதியின் மஞ்சள் வான் கட்டுவன் நோக்கி விரைந்தது.



சிலநிமிடங்களில் தடுப்புகாவ லரண் களில் நின்ற போராளிகளுடன் இணைந்து தாக்குதல் தொடங்கியது. எம்மவர் மத்தியில் இருந்து குறிபிச காத மோட்டார் குண்டுத்தாக்குதல்கள் எதிரியை நிலை குலையச் செய்கிறது. பாரிய இழப்பினைச் சந்தித்த இரா ணுவம் முகம் கொடுக்க மாட்டாமல் முகாமிற்கு பின்வாங்கி கண்மூடித் தனமான விமானத்தாக்குதல்களை யும் உலங்குவானூர்தித் தாக்குதல் களையும் மேற்கொண்டது. உலங்கு வானூர்தி நடாத்திய ரொக்கற் தாக் குதலால் மதி காயப்பட்டான் உடனே மருத்துவமனைக்கு கொண்டு செல் லப்பட்டான். சில நாட்களில் காயம் பூரணமாக குணமாகும் முன்

மீண்டும் களத்தில் மிக சுறுசுறுப் பாக மதியை காணமுடிந்தது. எதி ரிக்கு பலத்த சேதத்தை விளைவிக் கும் திறமையான தாக்குதல் திட்டங் கள் இவரால் அடிக்கடி நிகழ்த்தப் படும். மதியின் திறமைக்கு தலைவரி னால் G3-A3 துப்பாக்கி வழங்கப் பட்டது.

சிறீலங்கா இராணுவத்தை கதி கலங்கவைத்துக் கொண்டிருந்தபோது இந்திய இராணுவம் வந்து சேர்ந்தது. அமைதிப்போர்வையை தூக்கி எறிந்து விட்டு அட்டூழியத்தில் இந்திய இரா ணுவம் இறங்கிய போது மதியின் துப்பாக்கி அவர்களை நோக்கி திரும் பியது. எதிர்பட்ட இடங்களில் எல் லாம் இந்திய இராணுவம் மதியின் குழுவினரால் பலத்த அடிவாங்க வேண்டி ஏற்பட்டது. எந்தத்தாக்குதல் நிகழ்ந்தாலும் அங்கு மதியின் பெயர் பரவலாக அடிபட்டது இந்திய இரா ணுவத்திற்கு மதியின் பெயர் பெரும் கிலியை ஏற்படுத்தியது.

மதியை உயிருடன் பிடித்துவிட வேண்டுமென இந்திய இராணுவத் தினர் எவ்வளவோ வழிகளில் முயன் றனர். அளவெட்டிப் பகுதியில் மதியும் அவன் குழுவினரும் தங்கியிருந்த பகுதி திடீரென இந்திய இராணுவத் தால் சுற்றிவளைக்கப்பட்டபோது இவன் எடுத்த யுத்த தந்திரங்களால் இந்திய இராணுவம் நிலை தடுமாறியது. இவரது நெருங்கிய தோழரான அசீஸ் வீரச்சாவடைந்தான். இந்தியப்படைக் கெதிராக தாக்குதல் முனைப்படைந்த வேளையில், ஆரம்பத்தில் வலிகாமப் பொறுப்பாளராகவும் பின்னர் 1988இல் தலைவரால் யாழ்மாவட்டப் பொறுப் பாளராகவும் மதி நியமிக்கப்பட்டான். இந்திய இராணுவம் நடாத்தமுனைந்த சிவில்நிர்வாகம் மதியினால் சிதைவு றது. 1988 டிசம்பர் 10திகதி தேச விரோதி ஒருவனால் காட்டிக்கொடுக் கப்பட்ட மதி இந்திய இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு சுடப்பட்டான். காலில் காயம் ஏற்பட்டது. நடக்க முடியாத நிலையில் எதிரியின் கையில் பிடிபடக்கூடாதென்ற இயக்க மரபிற் கிணங்க கைத்துப்பாக்கியால் தன் னைத்தானே சுட்டுக்கொண்டான். அந்தக்கணப்பொழுது அவனது புகழ் மிகுந்த உடல் அவன் உயிரிலும் மேலாக நேசித்த மண்ணைத்தழுவி யது. அவன் விட்டுச் சென்ற பாதை யில் பல்லாயிரக்கணக்கான வீரர்க ளின் எழுச்சி மிகுந்த பயணி தொடர்ப டன் தொடர்கிறது.

எழுதியவர்
போராளி - [illegible]

12ம் பக்கத் தொடர்ச்சி

குப் பிறகு இயக்கத்திற்குப்போய் முல்லைத்தீவுச் சண்டையிலை அவரும் வீரச்சாவடைந்திட்டன்.'

துக்கமாயும், பெருமையாயும் கூறியவள் சிறிது மூச்சுவிட்டாள். அவளின் மூச்சின் தன்மை எப்படி இருந்தது என்பதை நான் கணிக்க விரும்பாதவனாய் அவள் இருந்த திசையை இமைவெட்டாமல் பார்த்த படியே இருந்தேன்.

'முதலே பாதிக்கப்பட்டு வாழ்வின் மீதே வெறுத்துப் போயிருந்த அம்மா சின்னண் ணாவின்ர அந்திரேட்டி செய்யத்தான் [illegible]


[illegible]

நீண்ட பெருமூச்செறிந்தாள். இம் முறை அவளின் மூச்சு முன்னையதைவிட மாறுபட்டதாய் இருந்தது.

எதைப்பற்றிக் கதைப்பது என்று நிலை யில் நான் வாய்மூடி மௌனித்திருந்தேன்.

'குடும்பக் கதைகளை விடுவம் [illegible]

[illegible]




## முதலாம் பாகம்
### அத்தியாயம் முப்பது

தொடர்ச்சி...

பிராட்ஷா குறுக்கிட்டார். 'இந்த எக்ஸோடஸ் விசயத்துக்கு வருவோம். இதனுடைய தாக்கங்கள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. நாங்கள் புறொமிஸ்ட்லாண்ட் விசயத்தில் விட்டுக் கொடுத்தோம். ஆனால் இம்முறை விட்டுக்கொடுக்கப் போவதில்லை. இந்தக் கப்பல் எங்கள் கடல் பிராந்தியத்தில் இருக்கிறது. பிரெஞ்சுப் பிராந்தியத்தில் அல்ல. நாங்கள் கப்பலில் ஏறப்போவதில்லை. நாங்கள் அவர்களை ஜேர்மனிக்கு அனுப்பமாட்டோம், அவர்களை மூழ்கடிக்கவும் மாட்டோம். அவர்கள் மக்கி மண்ணாகும் வரை அங்கேயே கைரோனியாவில் இருக்கப் போகிறார்கள். மண்ணாகும் வரை ரெவர் பிறவுண், ஓட்டாத ரெவர் பிறவுண், மண்ணாகும்வரை'

கோபம் ஏற அவர் கைகள் சிறிது நடுக்கம் கண்டன. ரெவர் பிறவுண் கண்ணை மூடிக்கொண்டார். 'இதை நாங்கள் எங்கள் நீதியின் அடிப்படையில் கையாள முடியாது. சித்திரவதைத் தடுப்பு முகாங்களில் வளர்ந்த முந்நூறு பிள்ளைகளைப் பலஸ்தீனம் போகாமல் தடுக்க எங்களுக்கு முகாந்திரம் இல்லை. எண்ணெய் கால்வாய் அரபுக்கள் எல்லாமே நாசமாகப் போகட்டும் எங்களுக்கு முகாந்திரம் இல்லை. புறொமிஸ்லாண்டை ஜேர்மனிக்கு அனுப்பியதன் மூலம் எங்களை நாங்களே கோமாளிகளாக்கிக் கொண்டோம்.'

'உங்களுடைய அனுதாபங்களைப் பற்றி எனக்குத் தெரியும்.'

'கனவான்களே' இது போதும்.

ரெவர் பிறவுண் எழுந்து நின்று பிராட்ஷாவின் மேசையின் மேலாக குனிந்து நின்றார். 'இந்த எக்ஸோடஸ் சிக்கலில் நாம் வெற்றியடைய ஒரு வழிதான் இருக்கிறது. யூதர்கள் பிரசாரத்தைச் செய்யவே இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்கள். அவர்களுடைய உத்தியை அவர்களுக்கு எதிராகவே திருப்புவோம். எக்ஸோடஸை இந்த நிமிடமே போக விடுங்கள். அது ஒன்றுதான் அவர்கள் விரும்பாதது.'

'ஒரு போதும் முடியாது'

'அவர்களுடைய திட்டத்துள் நாம் சிக்கிக் கொள்வது உங்களுக்குப் புரியவில்லையா சேர்.'

'நான் சதாம் ஹவுசில் இருக்கும் வரை அந்தக் கப்பல் போகாது'

### அத்தியாயம் முப்பத்தொன்று

மார்க் பார்க்கர்,
டோம் ஹோட்டல்,
கைரோனியா — சைப்பிரஸ்,

உன்னுடைய அறிக்கை முக்கியத்துவம் பெற்று வருகிறது. தொடர்ந்து அனுப்பிக்கொண்டிரு.

கென் பிராட்பரி — ஏ என் எஸ் — லண்டன்

கைரோனியா — சைப் பிரஸ்.
எழுதுபவர் — மார்க் பார்க்கர்.

இது ஒரு நம்ப முடியாத காட்சி. ஆயிரம் போர் வீரர்கள், டாங்கிகள் பீரங்கிகள், ஒரு கடற்படை விசேட நடவடிக்கைப் பிரிவு, எல்லாமே ஒரு ஆயுதம் தரிக்காத இழுவைப்படகை ஒன்றுமே செய்ய முடியாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எக்ஸோடஸ் போர் தொடங்கி ஒரு வாரம் ஆகிறது. பிரிட்டிஷாரும், அகதிகளும் தங்கள் கொள்கைகளில் பிடிவாதமாய் இருக்கிறார்கள். இன்று வரை இந்தச் சட்டவிரோதக் கப்பலில் எவரும் ஏறவில்லை. அவர்கள் தங்களைத் தாங்களே தகர்த்துக்கொள்ளப்போவதாகப் பயமுறுத்தி இருக்கிறார்கள். சரக்கு இறக்கும் மேடையில் இருந்து சில நூறு யார் தூரத்திலேயே நிற்கிறது. தொலை நோக்குக் கண்ணாடியில் பார்த்தால் மிக அண்மையில் பார்க்கலாம்.

எக்ஸோடசில் இருக்கும் பிள்ளைகளின் மனநிலை அபூர்வமாய் இருக்கிறது. அவர்கள் கடந்த வாரத்தைப் பாடல்களைப் பாடுவதிலும், சரக்கு இறக்கும் துறையிலும், கடல் சுவர்களிலும் நிற்கும் பிரிட்டிஷ் இராணுவத்தை நோக்கிக் கேலிக் [illegible] எழுப்புவதிலும், [illegible] விட்டனர்.

மார்க்குடைய அறிக்கைகள் ஒவ்வொரு நாளும் சென்று கொண்டிருந்தன. ஒவ்வொரு அறிக்கையும் ஒவ்வொரு புதிய ரசமான விபரங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

பிராட்ஷா எக்ஸோடஸ் விசயத்தை ஒரு பரிசோதனை முயற்சியாகக் கையாள முடிவெடுத்த போதே பாதகமான விமர்சனங்களை எதிர்பார்த்திருந்தார். ஆங்கிலோ - பிரெஞ்ச் உறவில் முன்னெப்போதும் பாவிக்கிராத அவமானப் படுத்தும் சொற்பிரயோகங்களோடு பிரெஞ்சுப் பத்திரிகைகள் தங்கள் வழமையான பாணியில் ஓங்கிக் குரல் கொடுத்தன. இச் செய்தி ஐரோப்பா எங்கும் பரவியது. பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூட சில பிரிந்து நின்று, எக்ஸோடஸைப் பலஸ்தீனம் போக அனுமதிக்காமல் இருப்பது பற்றி வைற்ஹோலின் புத்திசாலித் தனத்தை விமர்சித்தன.

பிராட்ஷா ஒரு புத்திசாலித்தனமான அரசியல்வாதி. இதைப்போன்ற எத்தனையோ புயல்களைச் சமாளித்தவர். இது ஒரு சிறிய விஷயம். இது கெதியில் அடங்கிவிடும் என நிச்சயமாக நினைத்தார். அவர் தங்கள் சார்புப் பத்திரிகையாளர் மூவரை கைரோனியாவுக்கு அனுப்பி பார்க்கரின் அறிக்கைகளுக்கு எதிர் அறிக்கைகளை விடச் செய்தார். பிரிட்டிஷ் நிலைப்பாட்டை விளக்கும் அறிக்கைகளைத் தயாரிக்க அமைச்சுக்கு மேற்பட்ட திறனாளர்கள் கடுமையாக உழைத்தனர். பிரிட்டிஷார் பக்கம் நியாயம் இருப்பது போலிருந்தாலும், அவை நல்ல முறையில் சமர்ப்பிக்கப்பட்டாலும், முந்நூறு அகதிப் பிள்ளைகளின் விஷயத்தில் ஏற்படக்கூடிய இயற்கையான அனுதாப அலையை மட்டுப்படுத்தப் போதவில்லை.

சியோனிஸ்டுகள் உண்மையாக அக்கறை உள்ளவர்களாக இருந்தால் ஏன் முந்நூறு ஒரு பாவமும் அறியாத பிள்ளைகளின் உயிரை ஆபத்துக்கு உள்ளாக்குகிறார்கள்? முழு முயற்சியும், அனுதாபத்தை ஏற்படுத்தவும், உண்மையான பலஸ்தீன பிரச்சினையை குழப்படி செய்ய செய்யப்படும் ஒரு தீய நோக்குடைய சதி எனவும், நாங்கள் வெறி பிடித்தவர்களுடன் காரியமாற்றுகிறோம் என்பது தெளிவாக இருக்கிறது என்றும், அரி பென் கானான் சட்டவிரோத காரி



லியோன் யூரிஸ்

யங்களில் பல வருட அனுபவம் உள்ள சியோனிச வாத தூண்டிவிடுதலைத் தொழிலாகச் செய்பவன் எனவும் பிரச்சாரம் செய்தனர்.

அரை டசின் நாடுகளின் பத்திரிகையாளர்கள் நிக்கோசியா விமான நிலையத்தில் வந்திறங்கி, கைரோனியா பகுதிக்குள் செல்ல அனுமதி கேட்டு வற்புறுத்தினர். பெரிய சஞ்சிகைகள் சிலவும் தங்கள் குழுக்களை அனுப்பி வைத்தன. டோம் ஹோட்டல் ஒரு அரசியல் மகாநாட்டு செயலகம் போல் தோற்றமளிக்க ஆரம்பித்தது.

பாரிசின் உணவகங்களில் பிரிட்டிஷார் தூற்றப்பட்டனர். லண்டனின் புதுமான சாலைகளில் பிரிட்டிஷார் ஆதரிக்கப்பட்டனர். ஸ்ரொக்ஹோமில் இது பற்றிய பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. ரோமில் விவாதங்கள் நடந்தன. நியூயோர்க்கில், எக்ஸோடஸ் போகாது என ஒன்றுக்கு நாலாக பந்தயம் பிடிப்போர் பந்தயம் ஏற்றனர்.

இரண்டாவது வார முடிவில் அரி பென் கானான், மார்க் கப்பலில் ஏற அனுமதி அளித்தான். பொருத்தமான நேரத்தில் இந் நிகழ்ச்சியை நடத்த முன்பே முடிவு செய்திருந்த சைகைகள் மூலம் ஒழுங்கு செய்து கொண்டான். எக்ஸோடஸுக்குள் முதலில் சென்ற பத்திரிகையாளன் என்ற ரீதியில் அவனது அடுத்த மூன்று அறிக்கைகளும் எல்லாப் பத்திரிகைகளிலும் முன்பக்கத்தில் பிரசுரமாயின.

எக்ஸோடஸ் பேச்சாளரான அரி பென் கானானுடன் பிரத்தியேக சந்திப்பு கைரோனியா — சைப்பிரஸ் (ஏ என் எஸ்)

இன்று எக்ஸோடசில் இருக்கும் முந்நூறு பிள்ளைகளின் பேச்சாளராகிய அரி பென் கானானைச் சந்திக்கும் முதல் பத்திரிகையாளனானேன். நான் அரி பென் கானானுக்கு, பிரிட்டிஷார் அவன்மேல் சாட்டும், அவன் ஒரு தொழில்ரீதியான சியோனிஸ்ட் குழப்பத்தை நடாத்துபவன் என்றதும், வேறு வகை ஹோர்களால் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் அவனுக்குத் தெரியப்படுத்தினேன். நாங்கள் மனித வெள்ளம் இருக்காத ஒரு இடமான செறுக்கும் அறையில் உரையாடினோம். பிள்ளைகள் இன்னும் உற்சாகமான மனப்பான்மையோடு இருந்தாலும், இருவாரகால முற்றுகையின் தாக்கங்கள் அவர்கள் உடல்களில் தெரியத் தொடங்கி உள்ளன.

பென் கானான், 30 வயதும், கட்டுமஸ்தான ஆறடி உயரமும், கறுத்த கேசமும், நீல நிறக் கண்களோடு ஒரு திரைப்படக் கதாநாயகன் என்று தவறுதலாக எண்ணப்படக்கூடிய தோற்றத்தைக் கொண்டிருக்கிறார். அவர் உலகெங்கிலுமுள்ள தங்கள் நலன் விரும்பிகளுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, பிள்ளைகளும் மிக நன்றாக இருப்பதாகத் தெரிவித்தார். எனது கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் 'தனிப்பட்ட முறையில் என்னைத் தாக்குவது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. நான் இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் இராணுவத்தில், கப்டனாக சேவையாற்றியதைச் சொல்லி இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் ஒரு பிரச்சினையை உருவாக்கும் சியோனிஸ்டாக இருப்பதை ஒத்துக்கொள்கிறேன். [illegible]

நான் அவரை, பிரிட்டிஷ் வாதங்களைப் பற்றியும், எக்ஸோடஸின் முக்கியத்துவம் பற்றியும் கேட்டபோது, 'யூதர்களாகிய நாங்கள் பல விஷயங்களுக்காகப் பழி சொல்லப்படுகிறோம். அது எங்களுக்குப் பழகிப் போய்விட்டது. [illegible]

நான் [illegible]

தொடரும்...

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

ஆடி 1983ல் உலகே காணாத கொடிய இன அழிப்பை அப்பாவித் தமிழ் மக்கள் மேல் நடாத்திய சிறீலங்கா அன்று முதல் இன்று வரை தனது அரச பயங்கர வாதப் போக்கில் எவ்வித மாற்றமும் இல்லாமல் தமிழ் மக்களை கொன்று குவித்து வருகிறது. ஆனால் தனது பயங்கரவாதத்தை மறைக்க சிறீலங்கா தமிழ் மக்களின் உயிரை உடலை உடமைகளை தேசத்தைப் பாதுகாக்க தாம் ஆயுதம் ஏந்தி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என உலகிற்கு உண்மைக்கு மாறான வகையில் பிரச்சாரம் செய்து பல தடவை தோல்வி கண்டாலும் மீண்டும் மீண்டும் புதிய புதிய வழிகளில் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. இந்நிலையில் முதலில் அமெரிக்க சட்டத்தரணி திருமதி. கரன் பார்க்கர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு என அழைக்கப்பட முடியாது என்பதற்கு அளித்துள்ள சில விளக்கங்களை முதலில் பார்ப்போம்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என வகைப் படுத்துவது வெறும் அரசியல் நோக்கமே தவிர அவ்வாறு வகைப்படுத்தலுக்கான சட்ட ஆதாரங்களோ அல்லது உண்மைகளோ எதுவும் இல்லை. இந்த அறிக்கை எனது கருத்தை உறுதி செய்வதற்கான சட்ட ஆய்வாக அமைகிறது.

முதலில் காலனித்துவத்தினாலும் பின்னர் காலனித்துவத்தால் உருவாக்கப்பட்ட சிங்களப் பெரும்பான்மை ஆட்சியினாலும் ஏற்படுத்தப்பட்ட கட்டாய ஒற்றையாட்சியில் தமிழர்கள் மேலும் மேலும் அச்சங்களுக்கு உள்ளாகினர். தமிழ் மக்கள் வேரூன்றி விட்ட வேற்றுமைகளுக்கு முப்பது ஆண்டுகளாக அமைதியான முறையில் தீர்வுகள் காணமுயன்ற அனுபவங்களின் பின்னணியில் 1970 களின் பிற்பகுதியில் தம்மைப் பாதுகாப்பதற்கான ஆயுதப் படையினை அமைத்துக் கொண்டனர். தற்பொழுது தமிழர்களின் பாதுகாப்புப்பலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பாக உரம் பெற்று சிறீலங்கா அரசாங்கத்தின் ஆயுதப்படைகள் ஊர்காவற்படை மற்றும் ஆயுத அமைப்புக்கள் இடமிருந்து தமிழ் பகுதிகளைப் பாதுகாத்து வருகின்றது.

சிறீலங்காவில் நடைபெறும் போர் உள்நாட்டுப் போராக இருந்தால் வெளியில் உள்ள அரசுகள் நடுநிலைமையாக இருத்தல் வேண்டும். உள்நாட்டுப் போர் அதனது வரைவிலக்கணப்படி ஒரு அரசின் உள்விவகாரம். இதனால் நடுநிலையாக பிற அரசுகள் இருப்பது அவற்றின் கடமை. போர் தேசிய விடுதலைப் போராட்டமாக இருப்பின் வெளியில் உள்ள அரசுகள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் மக்களுக்கு அதாவது தமிழ் மக்களுக்கு அவர்களது கோரிக்கை நிறைவேற உதவ வேண்டும். தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையினை அனுபவிப்பதை அழித்தொழிப்பதற்கு முயலும் சிங்கள அரசாங்கத்துடன் மற்றைய அரசாங்கங்கள் கொள்ளும் எந்த வகைத் தொடர்பும் அச் செயற்பாட்டுக்கு ஆதரவளிக்கிறது என்பதால் மற்றைய அரசாங்கங்கள் சிங்கள அரசாங்கத்துடன் எவ்வகையிலான தொடர்புகளையும் வைத்திருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

சிறீலங்கா தமிழ் மக்களின் வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், சந்தைகள் மற்றும் வர்த்தகத்திற்காக மக்கள் கூடும் இடங்கள், கோயில்கள், தமிழர்களின் வரலாற்றுக் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆதியனவற்றை எல்லாம் மூர்க்கத்தனமான முறையில் இராணுவ நடவடிக்கைகளால் அழிப்பதன் மூலம் மனிதாய சட்டங்களை அப்பட்டமாக மீறிவருவதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அரசாங்கம் நடுநிலையான சர்வதேச உண்மைகளை கண்டறியும் ஆய்வாளர்களை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுமதிக்க மறுப்பது உண்மைகள் வெளியாவதை மேலும் சோகமாக்குகின்றது.

நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ யுத்தத்தில் ஈடுபடும் அனைத்து அரசாங்கங்களும் ஜெனிவா மரபுசாசனத்தின் விதி இலக்கம் 1 இன் கீழ் ஜெனிவா மரபுசாசனத்தை மதிக்க வேண்டிய கடப்பாடு உண்டு என நீதிக்கான சர்வதேச நீதி மன்றம் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. என்னுடைய அபிப்பிராயத்தின்படி இந்த விதிக்கு மதிப்பளித்து சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசாங்கத்தினை பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாய உதவிகளை வழங்கும்படி அழுத்தங்களை மேற்கொள்வதுடன் சர்வதேச நடுநிலைமை குழுவொன்றினை அங்கு அனுப்பி உண்மைகளை கண்டறியவும் முயல வேண்டும்."

திருமதி. கரன் பார்க்கர் அவர்களின் பார்வை சிறீலங்கா தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என செய்துவரும் பிரச்சாரத்திற்கு எதிராக அவருடைய கருத்துக்களின் அடிப்படையில் சில விளக்கங்களை அளிக்கிறது.

சிறீலங்கா அரசாங்கம் தோற்றுவித்த அரச பயங்கரவாதத்தால் உயிர், உடல், உடைமை இழப்புக்களால் துடிதுடித்த அப்பாவித் தமிழ் மக்கள் தமது தேசிய பாதுகாப்பைத் தாமே மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு சிறீலங்காவால் திர்ப்பந்திக்கப்பட்டமை வரலாறு. 1983 ஆடியில் உச்சக்கட்டத்தை அடைந்த தமிழின அழிப்புக்கு உலகு காட்டிய அசிரத்தையான போக்கே தமிழ் மக்கள் தாம் உயிர் வாழ போராடியே ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளியது. எய்தவன் இருக்க அம்பை நோவது போல சிறீலங்கா தொடங்கிய பயங்கரவாதத்தில் இருந்து தாம் உயிர் வாழ்வதற்கு தமிழ் மக்கள் தோற்றுவித்த மக்கள் போராட்ட அமைப்பையும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதம் என யாராவது அழைப்பார்கள் ஆனால் அது அவர்களின் அரசியல் அறியாமையை அல்லது அவர்களின் சுய விருப்பு போக்குகளையே வெளிக்காட்டுகின்றன. இது இரண்டையும் மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழ் மக்களாகிய நம்முடையதாக உள்ளது.

நாம்தான் புலிகள். எம்மைப் பாதுகாப்பதற்கு ஆயுதம் ஏந்திய எமது பிள்ளைகளும் சகோதரர்களுமே புலிப்படை. எங்கள் எல்லோரதும் உயிருக்காகத் தன் உயிரை மட்டுமல்ல முழு வாழ்வையுமே அர்ப்பணிக்க திடசங்கற்பம் பூண்டு எழுந்த பெருந் தலைவன் எங்கள் தேசியத் தலைவன் பிரபாகரன். தமிழீழ மக்களது நல்வாழ்வும் தமிழீழத் தேசத்தின் விடுதலையும் அப்பெருந்தலைவனின் நோக்கு. சிறாரும் திடமும் உள்ள எங்கள் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் தலைமையில் நாம் அடைய முயலும் எம் விடுதலை எவ்வகையில் உலகின் அமைதியை பாதுகாப்பை சிதைக்கிறது? பயங்கரவாதம் ஆகிறது? என இடித்துக் கேட்க வேண்டிய பொறுப்புள்ளவர்களாக புலம்பெயர் தமிழர்களாகிய நாம் உள்ளோம். நாமே நம் விடுதலைப் போராட்டத்தின் புலம்பெயர் சாட்சிகள். நாம் எம் கடமையை உணர்ந்து எம் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சாட்சிகளாக மாறுவோமானால் சிறீலங்காவின் பயங்கரவாத பிரச்சாரத்தின் பொய்மையை உலகு இனங்காணும் வேகம் விரைவுபடும். தற்பொழுது எம் புலம்பெயர் தமிழர்கள் பலரின் முயற்சிகளால் உலக நாடுகளிடை சிறீலங்கா நடாத்தி வரும் பயங்கரவாத பிரச்சாரம் பிசுபிசுத்து போயுள்ளது. நாம் இன்னும் இன்னும் வேகமாகச் செயற்பட்டு சிறீலங்காதான் பயங்கரவாதத்தின் ஊற்று என்பதை உலகிற்கு வெளிப்படுத்த ஆடி இனஅழிப்பின் இந்த 16வது நினைவு நாளில் உறுதி பூணுவோம்.

அன்பின் ஆசிரியர்

(15.07.1999)

## தியாக தீபங்கள்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் முதலாக அன்றுதான் கைவிலெடுத்த என். எம். ஜி. செல்லக்கிளியின் கைகளில் வேகமாக இயங்கிறது. சில, நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

புலிகளை வேட்டையாடவென வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறிவர்த்தனா என ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இறுதியாக போலீசார் கொண்டு வந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன் அவர்கள் வந்த காரையே எடுத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியினரின் முடிவு பற்றியசெய்தி வெளியே தெரியவந்தது. செல்லக்கிளி தலைமையிலான இந்தத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழ்ப் போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் நாள், மிகப்பெரிய இராணுவ முகாமான பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குச் செல்லும் வீதியில் திருநெல்வேலி என்ற இடத்தில் ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவ வண்டிகள் இரண்டின் மீது செல்லக்கிளி தலைமையிலான பதின்னான்கு விடுதலைப் புலிகளைக் கொண்ட கொரில்லா அணி தனது தாக்குதலை நடாத்தியது. 13 இராணுவத்தினரை வீழ்த்தி ஏராளமான ஆயுதங்களையும் எடுத்த உற்சாகத்தில் திளைத்த விடுதலைப் புலிகள் செல்லக்கிளியின் மறைவுச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து சோகத்தில் ஆழ்ந்தனர். அவரது இறுதிக் காலமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் திருப்புமுனை. ஆம்! சரித்திரம் படைத்த செல்லக்கிளி சரித்திரமாகிய அந்த நாளானது தமிழீழ விடுதலைப் பாதையில் அகிம்சைப் போராட்டமானது ஆணி வேரோடு பிடுங்கி எறியப்பட்டு ஆயுதப் போராட்ட சகாப்தம் உருவான நாளாகும்.


(அடுத்த இதழில் முடிவடையும்)







# அடங்காமண்ணுக்கு விலங்கிடத்துடிப்பவனே உன்னைப்பார்த்து அழுவதா? சிரிப்பதா?



வியாசன்